
Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 45 • 29.05.2016

NATHAN
KEY CUTTING CENTER
இல.63, முட்டாஸ்கடைச்சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மிசின் மூலம் திறப்புகள் வெட்டிக் கொடுக்கப்படும்
0776175609



# கூண்டுக்கு வெளியில் வந்த சிங்கங்கள்



# குளங்களை காணோம்

## வவுனியாவில் 'பகீர்' திருட்டு

என்னையா... இப்பிடி பண்றீங்களே? 6



வவுனியாவில் ஆட்டையை போட்ட அதிகாரிகள் 8



சிறிதரனுடன் இருந்தால் ஒன்றும் செய்ய முடியாது 9

# மீண்டும் சர்ச்சை

வடக்கு மாகாணசபையை மையமாக வைத்து அடுத்த சர்ச்சை உருவெடுத்துள்ளது. யாழ்நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கி அளிக்கவுள்ள 797 கோடி 50 இலட்சம் ரூபா திட்டத்தை முன்னிறுத்தி புதிய சர்ச்சை உருவெடுத்துள்ளது.

யாழ் நகரத்தை எப்படி புனரமைப்பது, அமைவிட மாற்றங்கள் செய்வதா என்பது மாதிரியான சிக்கலான விடயங்களில் அல்ல, திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான முன்னாயத்த கூட்டங்களிலேயே சர்ச்சை கிளம்பியுள்ளது. இந்த கூட்டங்களை யார் கூட்டுவது, எந்த அணி திட்டத்தை முன்னகர்த்துவது என்பது மாதிரியான வழக்கமான தமிழர் பிரதிநிதிகளின் அரசியல் அடிபிடி ஆரம்பித்துவிட்டது.

நகர அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்றை வடக்கு ஆளுனர் றெஜினோல்ட் கூரே கடந்த வாரம் கூட்டினார். இதில் கணிசமான மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இந்த கூட்டத்திற்கு இரண்டு நாட்களின் முன்னிருந்தே வடக்கு முதல்வரிற்கும், ஆளுனருக்கும் இடையில் நடந்த பனிப்போர் பற்றிய தகவல்கள் இப்பொழுது வெளிவரத் தொடங்கிவிட்டன. யாழ்நகர அபிவிருத்தி தொடர்பான அந்த கூட்டத்தை மாகாணசபை, முதல்வரை மீறியே ஆளுனர் கூட்டியுள்ளார் என்பது கடித விவகாரம் மற்றும் கூட்டத்தில் ஆளுனர் ஒதுங்கிக்கொண்டதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

ஆளுனர் மாகாணசபை மோதலிற்கு அண்மைநாட்களிலேயே பல சம்பவங்கள் காரணமாக அமைந்துள்ளது. ஒருசில வாரங்களின் முன்னர் முதலமைச்சரை தவிர்த்து, மாகாணசபை அமைச்சர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார் ஆளுனர். அமைச்சர்கள் கலந்து கொள்ளாததால் அது கைவிடப்பட்டது.

ஆளுனருக்கு எதற்கிந்த ஆர்வக்கோளாறு?

ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கு ஆளுனராக பதவி வகித்த பள்ளிகஹாரவின் காலத்தில்த்தான் இருதரப்பிற்குமிடையில் நெருக்கமும், நட்பும் நிலவியது. புதிய ஆளுனராக பதவியேற்றுள்ள றெஜினோல்ட் கூரே சர்ச்சைகளை மூட்டைகட்டிக் கொண்டு வடக்கிற்கு வந்துவிட்டாரோ என எண்ணும்விதத்தில் நாளொரு சர்ச்சை தோன்றிக் கொண்டி ருக்கிறது. அரசியல்வாதிகளின் பேச்சுக்களிற்கெல்லாம் அவர் பதில் சொல்லிக் கொண்டிருப்பது சங்கடமான காட்சிகளை நாளை உருவாக்கலாம்.

நிர்வாக ரீதியில் வடக்கு முதல்வர், மாகாணசபை சற்று மந்தகதியில் செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டில் ஓரளவு அல்ல நிறைய உண்மையுள்ளது. அதற்காக, "நீங்கள் சரிவரமாட்டீர்கள்... உங்களை விலக்கி நான் செய்துகாட்டுகிறேன்" என்ற பாணியில் ஆளுனர் செயற்படுவது ஜனநாயக அடிப்படைகளையே கேள்விக் குட்படுத்துவது. ஏனெனில், ஆளுனர் சவாலிற்குட்படுத்துபவர்கள் அத்தனை பேரும் மக்கள் பிரதிநிதிகள். ஆளுனரின் நியமனத்திற்கல்ல, மாகாணசபையின் பிரதிநிதிகளிற்குத்தான் மக்களின் வாக்குகள் விழுந்துள்ளன.

ஆளுனர், மாகாணசபை சர்ச்சை நமக்கு புதியதல்ல. மாகாண சபைக்குள் சர்ச்சையும் நமக்கு புதியதல்ல. இரண்டு விவகாரங்களிற்கு மிடையிலான இணைப்புக்கோடு ஒன்று உருவாகியுள்ளதாக ஒரு கருத்தும் உள்ளது.

இந்த விவகாரத்தில் மக்கள் பிரதிநிதிகளிற்குள்ள பொறுப்பை சுட்டிக்காட்டுகிறோம். யாழ் அபிவிருத்தி காலத்தின் கட்டாயம். பல தசாப்தங்களின் முன்னர் முறையான திட்டமிடலின்றி உருவாக்கப்பட்ட நகரத்தை மீளமைப்பது அத்தியாவசியமானது. ஆகவே வழமைப் பிரகாரம் அடிபிடிப்பட்டு இந்த திட்டத்தையும் கைவிட வேண்டாம். அல்லது, யாராவது ஒருதரப்பை அரசியல்ரீதியில் பலவீனப்படுத்த இந்த திட்டத்தில் தேவையற்ற குளறுபடிகள் வேண்டாமே.

ஆரம்பத்திலேயே இப்படியான மோதல்கள் நிகழ்வது மாகாணசபை நிர்வாகத்தை சீர்குலைத்துவிடலாம். ஆயினும், மாகாணசபை இதில் கவனம் செலுத்த வேண்டியது எல்லா தரப்புடனும் ஏன் மோதல் ஏற்படுகிறது என்பதை. இதில் அவர்கள் தரப்பிலுள்ள குறைகளை களைந்து கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

இதில் இன்னொரு விடயமும் கவனிக்கத்தக்கது. வடக்கு, கிழக்கு இரண்டு மாகாணங்களிலும் சமநேரத்தில் ஆளுனர் மீதான அதிருப்தி கிளம்பியுள்ளது.

தற்போதைய மாகாணசபையின் குறைபாடுகளை தமிழர் தரப்பு சுட்டிக்காட்டி, நீண்டகாலமாக அதை ஏற்க மறுத்து வந்தது. இந்த மாகாணசபையை ஏற்றமைகூட ஒரு தவிர்க்க முடியாத நெருக்கடி சமயத்தில்தான். 13வது திருத்தத்தின் குழந்தை மாகாணசபை. 13வது திருத்தம் தமிழரிகளின் அரசியல் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யாது, அது குறைபாடுகளையுடையது என்பதற்கு தொடரும் ஆளுனர்களின் ஏதேச்சாதிகாரம் சான்றாகிறது.

ஆளுனர் மாகாணசபை மோதலென்பது வெறும் மனிதர்களின் மோதலல்ல. இன்றைய திகதியில் அதுவும் இனங்களிற்கிடையிலான அரசியல்ப்போராட்டம்தான்.


**தீபம்**

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567


செய்திகளுக்கு : news@deepamnews.com


# சொன்னார்கள்



**டி.எம்.சுவாமிநாதன் – (அமைச்சர்)**

குற்றச்செயல்கள் தொடர்பில் தமிழில் முறைப்பாடு செய்வதற்கு பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்த வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். அண்மைக் காலமாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**சி.வி.விக்னேஸ்வரன் – (வடமாகாண முதலமைச்சர்)**

இன்றைய அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் ஏனைய கட்சித் தலைவர்கள் தமது அரசியல் சிந்தனைகளை மாற்றிக்கொண்டு தம்முடன் இணைந்து கொண்டு அரசியலில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைகள் காணப்படுகிறது. அவ்வாறான ஒரு நிலை ஏற்படுகின்ற போது ஒட்டுமொத்த தமிழர்களும் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு தமது உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபடக்கூடிய நிலை விரைவில் உருவாகும்



**ரணில் விக்கிரமசிங்க – (பிரதமர்)**

நாட்டிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் 13 வருட கட்டாயக்கல்வி வழங்கப்படுவதுடன் தேசிய கல்வி கொள்கை புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோல்வியடைந்த மாணவர்களுக்கு உயர்தரத்தில் கல்வி பயிலும் வாய்ப்பு கிடைப்பதில்லை. குறித்த புதிய கல்வி கொள்கை மூலம் சாதாரண தரத்தில் சித்தியடையாதவர்களும் உயர்தரத்தில் கல்வி பயிலும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.



**லக்ஷ்மன் கிரியெல்ல – (அமைச்சர்)**

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வை வழங்காவிட்டால் சர்வதேசம் எம்மை ஒதுக்கித் தள்ளிவிடும். இன்றைய ஜனாதிபதி மைத்திரி பிரதமர் ரணில் தலைமையிலான இணக்கப்பாட்டு அரசில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் என்றுமே தீர்வைக் காணமுடியாது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டிருக்க வேண்டும். ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் எவரும் எந்த அரசாங்கத்தினரும் அனைத்து கட்சிகளுடனும் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணத் தவறிவிட்டனர்.



**எம்.கே.சிவாஜிலிங்கம் – (வடமாகாண சபை உறுப்பினர்)**

வேலுப்பிள்ளை செல்வநாயகத்துடன் சிங்களத் தலைவர்கள் பிரச்சினையைத் தீர்த்திருந்தால் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழர் போராட்ட அரங்குக்கு வந்திருக்கமாட்டார். அதேபோன்று இரா.சம்பந்தன் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் காலத்தில் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது. சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்துடன், சிங்களத் தலைவர்கள் எமதுபிரச்சினையைப் பேசித் தீர்த்திருக்க முடியும்.



**நஸீர் அஹமட் – (கிழக்கு மாகாண முதலமைச்சர்)**

சம்பூரில் நடைபெற்ற வைபவத்தின் போது, ஆளுநரின் அழைப்பின் பேரில் மேடையில் ஏறிய போது, கடற்படை அதிகாரி தடுத்தன் காரணமாகவே அவரைத் திட்டினேன். வைபவம் நடைபெற்ற போது, எனக்கும் கிழக்கு மாகாண கல்வியமைச்சருக்கும் மேடைக்கு வருமாறும் அழைப்பு விடுக்கவில்லை. கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தன்னை மேடைக்கு அழைத்தன் பின்னர் தான் மேடையில் ஏற முயற்சித்த போது, கடற்படை அதிகாரி தனது வயிற்றுப் பகுதியை பிடித்து, மேடையில் ஏறவிடாமல் தடுத்தார். இதன் போது தான் பேசிய வார்த்தைகள் பதிவான காணொளிகளே ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

# க்ளிக் பக்கம்

நித்தியபூஜைக்கு ஏங்கித்தவிக்கிறதா மணல்காட்டு நாகர்கோவில்?

**என்னைப்பற்றி:** நான் சு.கதிர். கணனித்துறையில் பணியாற்றுகிறேன். இயற்கையை படம்பிடிக்க ஆர்வம்.



படம்: சு.கதிர்

இடம்: நாகர்கோவில்



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

# அபி பஷன் வேல்ட்

ABI Fashion World

1 வருட கால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் பரிசு மழை

அபி பஷன் வேல்ட் இன் முதலாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 10,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கிடையிலான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


## இதில் வெற்றிப்பெற்ற வாடிக்கையாளர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு...





ஜூட் டினேஸ் கோடத்துார்
பாசையூர், யாழ்ப்பாணம்.





காண்டீபன்
வவுனியா





என். தயாபாலசிங்கம்
கலட்டி, யாழ்ப்பாணம்.

## 30 ஆறுதல் பரிசுகள் பெற்ற வெற்றியாளர்கள்

1. வி. பஞ்சாலினி – வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
2. எஸ்.தர்சன் – ஸ்ரான்லி கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
3. வி. உஷாலினி – சித்தன்கேனி, யாழ்ப்பாணம்.
4. டி.வேதநாயகம் – வேரவில்
5. மேனகா – யாழ். பல்கலைக்கழகம்
6. குகசிறி – சங்கானை, யாழ்ப்பாணம்.
7. ஏ.டி. றஜித் – சாவகச்சேரி
8. துவாரகன் – அளவெட்டி
9. ஆர். சிவகுமாரன் – வல்வெட்டித்துறை
10. ராஜேஸ்வரி – யாழ்ப்பாணம்
11. அஜந்தன் – யாழ்ப்பாணம்
12. எஸ். ராதிகா – வல்வெட்டித்துறை
13. ஆர். சிறிகாந்தன் – கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
14. பஞ்சநாதன் – கொக்குவில்
15. கலைவாணி – திருநெல்வேலி
16. டிவிக்ஷா – யாழ்ப்பாணம்
17. அஸ்மில் – டனோவித்த
18. சிறிகுகன் – நட்டான்கண்டல்
19. நிரோஷா. ஆர் – சங்கானை
20. சுரேந்திரா – கோண்டாவில் மேற்கு
21. உமாகரன் – இணுவில் மேற்கு
22. கே. இராசம்மா – மிருசுவில்
23. அமரசிங்கம் – மானிப்பாய்
24. வை. பிரசன்னா – யாழ்ப்பாணம்
25. கே.எம்.ஏ. பிரதீபன் – புங்கன்குளம்
26. எஸ். ரேவதி – திருநெல்வேலி
27. என். சிறி அரவிந்தன் – இணுவில்
28. பி. கருனிகா – இணுவில்
29. ரி. அக்ஷயன் – வண்ணார்பண்ணை
30. என். சுகுமார் – வள்ளியம்மன் கோவில்

NO, 112, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA. TEL : 021 2223738 | 077 324 6503 /abifashionworld





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆஸ்துமா நோயாளியொருவருக்கு நிகழ்ந்த கதியை கடந்தவாரம் தீபம் அம்பலப்படுத்தியிருந்தது. கல்முனையிலிருந்து சிகிச்சைபெற சென்ற நோயாளிக்கு சேலைன் ஏற்றப்பட்டு, சேலைன் போத்தலை கையில் கொடுத்து வாங்கில் ஒன்றில் உட்கார வைக்கப்பட்டிருந்தார். இந்த படம் தீபத்தின் சமூக ஊடகங்களில் கடந்தவாரம் வெளியாகி வைரலாக பரவியது.

**Raja Mathavan** அதிர்ச்சி அடைய தேவையில்லை. இது தான் அங்கு பல வருடங்களாக நடக்கிறது .

**Thasiyanthan Santhiramohan**
Sadda nadavadikkai edukka padum

**SingaRaj Andi** pawm

**www.facebook.com/ahilan.nadarajah**
'இதுக்கு முதல் எப்பாவது ரத்தம் குடுத்திருக்கிறீங்களா?'
'இல்லை.. ஆனா நிறைய தரம் இழந்திருக்கிறம்'
#பஞ்ச்

**www.facebook.com/kananswamy**
யூதர்களுடன் தமிழரை ஒப்பீடு செய்து மகிழும் ஆட்களுக்கு தெரிவதில்லை யூதர்கள், பிராமணர்களுக்கு ஒப்பானவர்கள் என்பது.!

**www.facebook.com/suratha.yazhvanan**
அடித்து ஆட ஈழ அரசியலை விட தமிழக அரசியல் இலகுவாக இருக்கிறது.....# பக்க விளைவுகள் கிடையாது.

**www.facebook.com/Thangarajah.Thavaruban**
மஞ்சள் பத்திரிகை எண்டு சொன்னதை சபையின் பதிவில் இருந்து சிவஞானத்தார் நீக்கிட்டாராம். நீக்கினா என்ன நீக்காட்டி என்ன சொன்னது சொன்னது தானே. கையோட கண்பரிசோதனைக்கு ஒரு தீர்மானத்தை கொண்டுவாங்கப்பா "சபையில கலர் லைட் சிஸ்டம் ஏதும் இருக்கா?"





"மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"

உங்கள் நிலத்தடி நீரில் அடங்கியுள்ள மேலதிக கல்சியம், மக்னீசியம், நைத்திரேற்று மற்றும் உயிர்க் கொல்லி நோய்க்கிருமிகளையும் முற்றாக அழித்து உவர்ப்புத் தன்மையை நீக்கி விருப்புடன் பருகு வதற்கேற்ற 100% தூய நீரை Hi-PURE RO System மூலம் உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறுங்கள்

விலை 29,500/= இலிருந்து




உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machines மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள விலையுயர்ந்த இயந்திரங்களை கல்சியம் படிவிலிருந்து பாதுகாத்து நீண்ட காலம் பாவிப்பதற்கு Hi-PURE® Water Softener ஐ பொருத்தி பயன்பெறுங்கள்



எங்கள் வேறு சேவைகள்
- Waste Water and Sewage Treatment Plants.
- Design & Construction of Swimming Pool, Spa, Steam Rooms.
- Water Treatment Chemicals and Equipments.
- Also we do Service, Repair, Reinsted, Maintain Exsisting Water Treatment Plants & Equipments.

Everpure Hi-Tec (Pvt) Ltd.
Jaffna Office & Show Room
#341, K.K.S. Road, Jaffna.
E-mail: everpurehitec@gmail.com
Hotline: 0773 62 62 30, 021 567 7 567

# குளங்களை காணோம்

## வவுனியாவில் 'பகீர்' திருட்டு


நெளுக்குளம் ஆக்கிரமிக்கப்பட்ட காட்சி


வேப்பங்குளத்தில் ஆக்கிரமிக்கப்பட்டு வேலியிடப்பட்ட காணிகள்

வன்னிமது

வவுனியாவின் பெரும்பாலான கிராமங்களின் பெயர்களுடன் குளம் ஒட்டியிருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் குளங்களிருந்தன. குளங்களை மையமாக வைத்து கிராமங்கள் உருவாகின என்பதே சரி. சுற்றவர தரையால் சூழப்பட்ட மாவட்டம், ஆறுகள் அரிதான பிரதேசம் என்ற இயற்கை பாதக அம்சங்களை சரிசெய்ய மனிதர்கள் கண்டடைந்த தீர்வுதான் குளங்கள். வவுனியாவில் எங்கு திரும்பினாலும் குளங்கள். வவுனியாவில் சுமார் 700 குளங்கள் இருந்தன. குளங்களால் பிரபல்யமான ஊர்!

குளங்களை நம்பியே ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்கள் குடியிருந்தன. பல்லாயிரம் ஏக்கரில் நெல், கச்சான், மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டது. அதுதவிர நன்னீர் மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்றவையும் குளங்களை நம்பியிருந்தன. அதுதவிர, அங்குள்ள ஒவ்வொருவரின் வாழ்வுடனும் குளங்கள் தொடர்புபட்டிருந்தன. ஏனெனில், குளங்களின் நீர்ப்பிடிப்பே அங்குள்ள கிணறுகளின் நீர்மட்டத்தை தீர்மானித்தது.

நீரின்றி அமையாது உலகு. அனுபவம், விஞ்ஞானம் எல்லாமே இதைத்தான் சொல்கிறது. ஒவ்வொரு துளி நீரும் பெரும் சொத்து. உலகில் நீரிற்கான போராட்டங்கள் மெல்லமெல்ல தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. இனியொரு உலகயுத்தம் மூண்டால் அதன் பின்னணி காரணம் நீராக இருக்கலாமென்ற எச்சரிக்கை மணியும் கேட்க ஆரம்பித்துவிட்டது.

இயற்கையின் படைப்பில் நமது பெரும்பாலான பிரதேசங்களில் நீர்ப்பிரச்சனை இல்லையென்பதால் நம்மவர்கள் பெரும்பாலானவர்களிற்கு நீரின் மகத்துவம் புரிவதில்லை. நீரைப்பாதுகாப்பது ஒவ்வொரு மனிதர்களின் தலையாய கடமையென்பதை ஏனோ நாம் புரிந்து கொள்வதில்லை. நீரற்ற உலகமொன்றை நமது சந்ததியிடம் கையளித்துவிட்டு செல்வதை நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

நீர் பற்றிய நியாயமான அச்சத்தை ஏற்படுத்தும் பிரதேசங்களில் முக்கியமானது வவுனியா. குளங்களால் நீர்ப்பிடிப்பான பகுதியாக இருந்த வவுனியாவின் இன்றைய நிலையென்ன? 'ஒரு காலத்தில் இதிலெங்கேயோ குளம் இருந்ததே?' என தேட வேண்டிய எத்தனை இடங்கள் உள்ளன?

ஆம். வவுனியாவில் குளங்கள் காணாமல் போகும் பேரழிவு பற்றிய கதைதான் இது.

குளங்களால் பிரபல்யமடைந்த வவுனியா, இன்று குளங்கள் காணாமல் போவதால் பேசப்படத் தொடங்கியுள்ளது. இரண்டு பெரிய குளங்கள் இருந்த தடயமே இல்லாமல் போய்விட்டது. உக்கிளாங்குளம், திருநாவற்குளம் இரண்டும் அதிகமக்கள் குடியிருக்கும் கிராமங்கள் இன்று. மழை பெய்யும் சமயத்தில்த்தான் அங்கு குளமிருந்ததை வெள்ளம் நினைவூட்டும்.

கடந்த மாரிமழை சமயத்தில் தமிழகமே வெள்ளத்தில் மிதந்தது. குளங்கள் நிரப்பப்பட்டு குடியிருப்பாக்கப்பட்ட இடங்கள் முழுதாக மூழ்கின. அப்பொழுது வெள்ளத்திலிருந்து குளிரில் நடுங்கியபடி ஒருவர் பேஸ்புக்கில் எழுதினார். 'வெள்ளத்தை திட்டாதீர்கள். அது இப்பொழுதுதான் தனது பழைய சுவட்டை கண்டடைந்து, தனது வீட்டிற்கு ஓடிவந்துள்ளது' என. அதுபோலத்தான் வவுனியாவில் காணாமல் போன குளங்களை தேடி மழைவெள்ளம் ஓடிச்செல்லும் சமயங்களில்த்தான் அங்கு

### விஜயகுமார்

உதவி ஆணையாளர்
கமநல அபிவிருத்தி திணைக்களம்



நீண்ட காலமாகவே குளங்கள் காணாமல் போவது நடந்துள்ளது. குளங்களின் பெயர் ஊர் பெயர்களில் மட்டுமே உள்ளது. ஆனால் பௌதீகரீதியாக குளங்களை காணமுடியாத நிலை உருவாகியுள்ளது. உதாரணமாக உக்குளாங்குளம், திருநாவற்குளம் போன்ற பிரதேசங்களை குறிப்பிடலாம். இவ்வாறு குளங்களின் பகுதிகள் பிடிக்கப்பட்டதற்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். 50 குளங்களுக்கு மேல் எல்லைக்கற்கள் இட்டு குளங்களை பாதுகாத்துள்ளோம்.

இவ்வருடமும் 100 குளங்களுக்கு மேல் எல்லைக் கற்களை இட்டு பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். நிலஅளவை திணைக்களத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு பின்னராக அவர்கள் சராசரியாக வவுனியா மாவட்டத்தில் 30 வகையான குளங்களிற்கு நில அளவீடு செய்து படங்களை வைத்துள்ளார்கள். நிலஅளவை திணைக்களம் அளவீடு செய்த குளங்களின் அலைகரை பிரதேசங்களில் உள்ள வீடுகளிற்குரிய ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றை தவிர ஏனைய குளங்களின் நிலஅளவினை திணைக்களம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் நாங்கள் எல்லைக் கற்களை போடவுள்ளோம். எதிர்காலத்தில் நில அளவை திணைக்களம் ஏனைய பிரதேசங்களில் நில அளவினை மேற்கொள்ளும் போது எங்களுடைய குள எல்லைக்குள்ளதாக செயற்பாட்டினை எடுப்பதாக எமக்கு உறுதியளித்துள்ளார்கள்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் பிடிக்கப்பட்ட குளங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். 50இற்கு மேற்பட்ட வழக்குகளை தொடர்ந்துள்ளோம். அத்துமீறி குளத்தில் காணி கைப்பற்றியவர்கள் அதை விட்டு வெளியேற அரசகாணி சட்டத்தின் கீழ் 30 நாள் அவகாசம் வழங்கவுள்ளோம். வெளியேறாதவர்களை நீதிமன்றம் மூலமாக வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

### சந்திரசிங்கா

பொருளாளர்,
பெரியகட்டு கமக்கார அமைப்பு



நாம் பரம்பரை பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எமது குளம், குளத்தின் உயிர்நாடியான நீரேந்து பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால் குளத்தின் கொள்ளளவு குறைவடைந்து செல்கின்றது. குளத்து நீரை நம்பியே காலம்காலமாக விவசாயம் செய்தோம். இப்பொழுது விவசாயம் செய்ய நீர் பற்றாக்குறையாக உள்ளது. குளத்தில் அதிக நீரை தேக்கிவைக்க முடியவில்லை. அதனால் விவசாயம் வீழ்ந்துவிட்டது. வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் இயலாமல் இருக்கிறது. நெல் உற்பத்தியும் குறைந்துவிட்டது. முன்பு நாங்கள் 50 ஏக்கர் சிறுபோகம் செய்தோம். இப்பொழுது 30 ஏக்கரில்தான் செய்ய முடிகிறது.

குளங்கள் ஆக்கிரமிக்கப்படுவது ஒருபுறமிருக்க, குளங்கள் புனரமைக்கபடாமல் இருப்பதும் அடுத்த பிரச்சனை.



பண்டாரிகுளத்தின் மையத்தில் அமைந்துள்ள முருகன் கோவில்

**வ**வுனியா நகரத்தையண்டிய பகுதிகளில் மாத்திரம் அறுபது குளங்கள் வரை பகுதிய ளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. முழு மாவட்டத்திலும் முன்னூறு குளங்கள் சுருங்கிவிட்டன.

**வ**வுனியா கமநல அபிவிருத்தி திணைக் களத்தின் உதவி ஆணையாளராக பதவி யேற்றுள்ள விஜயகுமாரை அந்த பிரதேசமக்கள் பாராட்டுகிறார்கள். குளங்கள் பறிபோவதை தடுக்க வேண்டுமென்ற அக்கறையுடன் செயற்படும் ஒரே அதிகாரி இவர்தான் என்கிறார்கள் மக்கள். இவருக்கு முன்னர் பணியாற்றியவர்கள் அக்கறையற்று செயற்பட்டதுதான் இவ்வளவு பிரச்சனைக்கும் காரணம் என்பது மக்களின் குற்றச்சாட்டு.



நெளுக்குளத்தில் இடப்பட்டுள்ள எல்லைக்கல்



**வை.திருவருட் செல்வன்**
தலைவர்,
தாண்டிக்குளம்
கமக்கார அமைப்பு

**ப**த்தினியார் மகிழங்குளத்து நீரினை நம்பி 120 ஏக்கர் பெரும்போகமும் 15 ஏக்கர் சிறுபோகமும் செய்யப்பட்டு வருகின்றது. 30 40 ஏக்கர்வரையான விஸ்தீரணத் தில் இருந்த இந்தக்குளத்தின் பின்பக்கமாக இருந்த 10 ஏக்கரை ஆக்கிரமித்துவிட்டார்கள். அங்கு மண்நிரவப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட் டுள்ளது. இதனால் முன்னரைப்போல் விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயம் வீழ்ச்சியடைந்து விட்டது.

குளமிருந்தது பலருக்கு நினைவில் உறைக்கும்.

இதனைவிட, பெருமளவு குளங்கள் பகுதி யளவில் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. வவுனியா நகரத்தை அண்டிய வைரவப் புளியங்குளம், வேப்பங்குளம், பண்டாரிக் குளம் போன்றனவும் கணிசமாக ஆக்கிரமிக் கப்பட்டு விட்டது. குடியிருப்புக்கள், கட்டி டங்கள், வர்த்தகநிலையங்கள் என குளத்தை மனிதர்கள் ஆக்கிரமிப்பது வவுனியா எதிர் கொள்ளும் மிகப்பெரிய பேராபத்துக் களில் ஒன்று.

குளத்தில் நீரைச்சேமித்தே வவுனியாவின் உயிர்ப்பை பேண வேண்டிய நிலையில், குளங்கள் காணாமல் போவதன் விளைவை வவுனியா உணர ஆரம்பித்துள்ளது. மழைக் காலங்களில் கிடைக்கும் நீரை சேமிக்க உருவாக்கப்பட்ட குளங்கள் காணாமல் போகின்றன அல்லது கொள்ளளவு குறைந் துள்ளன. நீரேந்து பிரதேசங்கள் குறைய வெள்ள அனர்த்தத்தில் மக்கள் சிக்க ஆரம்பிக் கிறார்கள். குளங்கள் வெறும் குளங்கள் அல்ல. மனித வாழ்க்கையின் உயிர்ச் சூட்டை புதைத்து வைத்துள்ள கருவறைகள். அதை பேண வேண்டியது ஒவ்வொருவரின் கடமையுமாகும். ஆனால் நடப்பதோ வேறு. அதிகாரிகள் அவசரமாகதலையிடாவிட்டால் வாழ்வின் உயிர்ச்சூட்டை இழக்க வேண்டி வரலாம்.



பாலஸ்தீனத்தைச் சேர்ந்த 12 வயது முகமது அல் ஷேக், தன்னுடைய அசாதாரணமான செயல்களால் 'ஸ்பைடர்மேன்' என்று அழைக்கப்படுகிறார். கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத அளவுக்குத் தன்னுடைய கை, கால்கள், உடலை வளைக்கிறார். கால் பாதங்களைத் தூக்கித் தோள்களில் வைக்கிறார். உடலைப் பின்பக்கமாக வளைத்து, தலையை முன்னோக்கிக் காட்டுகிறார். இரண்டு கைகளால் நடக்கிறார். ஒரு கையால் நிற்கிறார். 4 அடி 6 அங்குல உயரமும் 29 கிலோ எடையும் கொண்டவர் முகமது.





ஆரையம்பதி கடற்கரை நரசிம்ம ஆலயத்தை அண்டிய கடற்கரை பகுதியில் மாலைவேலையில் இனம்தெரியாதவர்கள் செய்த பகல்நேர மணல் திருட்டு.







வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் கணிதபாட ஆசிரியர் அமரர் சி.ஹேமராஜன் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மூன்றாவது நினைவேந்தல் மற்றும் இரத்ததான நிகழ்வும் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

## தீபம் X RAY

வடமாகாணசபைக்கு தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் உறுப்பினர்களாகியுள்ளனர். வெற்றிபெறாதவர்கள், தேர்தலில் போட்டியிடாதவர்கள் சிலர் நியமன உறுப்பினர்களாகியுள்ளனர். நியமன உறுப்பினர்களில் சிலரை தமிழ்தேசிய கூட்டமைப்பு சுழற்சிமுறையில் நியமிக்க முடிவுசெய்திருந்தது.

வடக்கு மாகாணசபையின் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் போட்ட "டீல்" பற்றிய தகவல்களை இங்கு தருகிறோம்.

அந்த உறுப்பினரும் நியமன உறுப்பினர்தான். கூட்டமைப்பின் அங்கத்துவகட்சியொன்றின் உறுப்பினர். அவரது பதவிக்காலம் முடிந்துவிட்டது. சுழற்சிமுறையில் இன்னொருவருக்கு அந்தப்பதவியை இப்பொழுது வழங்க வேண்டும். வழங்குவதென்றால் இவருக்குத்தான் வழங்குவார்கள் என ஒருவரின் பெயரும் அடிபட்டது. சோடாக்கடைகாரரின் மகன்தான் அந்தப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

இப்பொழுது பிரச்சனையென்னவென்றால், பதவியிலிருக்கும் உறுப்பினர் அதை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. கதிரையில் உட்கார்ந்திருக்க என்னென்ன தில்லாலங்கடி வேலை செய்யலாமோ அத்தனையும் செய்கிறாராம்.

வேறு கட்சியென்பதால்த்தான் பதவியை விட்டுக்கொடுக்க கேட்கிறார்கள், அரசுக்கட்சிக்கு சென்றால் பதவியை விடச்சொல்லி கேட்கமாட்டார்கள் என நினைத்த அந்த உறுப்பினர், அரசுக்கட்சிக்கு தாவ விரும்பியிருக்கிறார். கட்சி முக்கியஸ்தர்கள் பலருடன் கட்சிதாவும் பேச்சு நடத்தியிருக்கிறார். பதவியை பறிக்காதீர்கள், உங்கள் கட்சியில் இணைகிறேன் என பல தலைவர்களின் கதவுகளையும் தட்டியுள்ளார்.

எனினும் யாரும் அவரது கோரிக்கையை ஏற்கவில்லை. அந்தகட்சியிலிருந்து ஏற்கனவே சிலர் அரசுக்கட்சிக்கு தாவிய சர்ச்சை பலகாலமாக நீடித்தது. புதிதாக சர்ச்சையை விலைகொடுத்து வாங்க விரும்பாத அரசுக்கட்சி அவருக்கு கதவைத் திறக்கவில்லை.

கதிரை ருசி விடாத நியமன உறுப்பினர் அடுத்த எடுத்த அஸ்திரம் வித்தியாசமானது. தானொரு மலையக வம்சாவளியை சேர்ந்தவர், மலையகத்தவர்களிற்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதால் அடுத்த பதவிக்காலத்தை மலையக தமிழராக பிரதிநிதித்துவப்படுத்துகிறேன் என கூறியுள்ளார். இதற்காக மலையகத்தின் பிரபல்யமான தமிழ் அரசியலதலைவர் ஒருவரின் சிபாரிசையும் கட்சிக்கு கொடுத்துள்ளார். எனினும், இந்த றூட்டும் வேலைக்காகவில்லை.

இதற்கடுத்து அவர் செய்ததுதான் தில்லாலங்கடியின் உச்சம். இவருக்கு அடுத்து பதவிக்கு வரவுள்ள கட்சியின் தலைவருடனேயே டீல் போட்டுள்ளார். மாகாணசபை உறுப்பினர்களிற்கு புதிய வாகனம் வாங்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது, அதற்கு இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும், அந்த அவகாசம்வரை என்னை மாற்ற நச்சரிக்காதீர்கள் என தடாலடியாக சரண்டராகியுள்ளார். அதன்பின் அவர் போட்டதுதான் மெகா டீல். வாகனம் வாங்கும்போது நியமிக்கப்படும் புதிய உறுப்பினரிற்கு உரிய பங்கு பணத்தை கொடுத்து அவரையும் சமாளிப்பேன் என டீல் போட்டுள்ளார்.

இதற்கு டீலா? நோ டீலா? சொல்வதென்ற குழப்பத்தில் தலைவர் தலையை சொறிந்து கொண்டிருக்கிறாராம்.



# என்னையா... இப்பிடி பண்றீங்களே?

**வண்டுமுருகன்**

யாழ்ப்பாண நகர அபிவிருத்திக்கு உலக வங்கி பெருந்தொகை நிதியளிக்க முடிவு செய்துள்ளது. இதற்கான முதற்கட்ட பேச்சுக்கள் நிறைவடைந்துவிட்டன. விரைவில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த திட்டம் பற்றிய நீண்ட கலந்துரையாடலை உலகவங்கி அதிகாரிகள் வட மாகாணசபையுடன் நடத்தியிருந்தார்கள். அரசஅதிகாரிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுவிட்டன.

ஆனால் கடந்த வாரம் வடக்கு தமிழ் அரசியல்களத்தில் இது பற்றிய சர்ச்சை மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாழ் நகர அபிவிருத்தி பற்றி ஆளுனர் கூட்டிய கூட்டம் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

ஆளுனரின் கூட்டத்தை முதல்வர் அவசியமற்றதென கூறி நிராகரிக்க, அதனை ஒரு தொகுதி உறுப்பினர்கள் பின்பற்றினார்கள். இன்னுமொருதொகுதி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இது அரசியலரங்கிலும், ஊடகவெளியிலும், சமூகவலைத்தளங்களிலும் 'அடிதடி' மோதலாக உருவெடுத்துள்ளது.

அன்றைய கூட்டத்தில் என்ன பேசப்பட்டது, நகர அபிவிருத்தி பற்றி மக்கள் பிரதிநிதிகள் என்ன பேசினார்கள், அதுபற்றிய முழுமையான தகவல்களை அவர்கள் வைத்திருந்தார்களா, ஆரோக்கியமான விடயங்களைத்தான் முன்வைத்தார்களா என்பது பற்றி எதுவும் தெரியாது.

தெரிந்ததெல்லாம் யார் கலந்து கொண்டார்கள், யார் புறக்கணித்தார்கள் என்பதுதான். யார் யார் எந்த அணியில் உள்ளனர்? யார் யார் எதை எதிர்க்கிறார்கள்? எதை ஆதரிக்கிறார்கள் என்ற ஏட்டிக்குப்போட்டி அரசியலும், அதற்கு ஊதுகுழல் வாசிக்கும் வடக்கின் சில ஊடகங்களுமே இதன் பின்னணியிலிருந்தார்கள்.

நகர அபிவிருத்தி பற்றி என்ன பேசப்பட்டது? நகரத்திட்டம் எப்படியிருக்கும்? நகர அபிவிருத்தியில் நலிந்தவர் நலன் குறிப்பாக நகரையண்டி வாழும் சேரிப்புற வாழ்க்கை நடத்துபவர்களின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படுமா, தனியே கட்டிடக்காடாகத்தான் இருக்குமா அல்லது இயற்கையோடிணைந்த நகரமாகுமா, நகர அபிவிருத்தியில் உள்ளூர் வளங்களை, தொழிலாளர்களை எப்படி இணத்துக் கொள்வது, நகர அபிவிருத்தியில் சில தொழிற்துறை, சில தரப்பினர் பாதிக்கப்பட்டால் அவற்றிற்கு எப்படியான தீர்வை காண்பது என பேசப்பட ஏராளம் விடயமுள்ளது. ஆனால் ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் அவை பேசப்படவில்லை. அங்கு பேசப்பட்டது, யார் எங்கு போனார்? யார் எந்த அரசியல் அணி? இதற்கு அப்பால் தமிழர்களால் ஏன் சிந்திக்க முடியாமல் உள்ளது.

இதுதான் நம்மவர்களின் பொது இயல்பு. நாமே திட்டமிட்டு நகரை உருவாக்கும் வாய்ப்பு வரும் போது அதனை பயன்படுத்தமாட்டோம். ஏனெனில் நமக்குத்தான் எல்லாம் தெரியுமே. ஆகவே ஆளாளில் பிழைகண்டுபிடித்து மல்லுக்கட்டிக் கொண்டிருப்போம். 'இவர்கள் அதுக்கு சரிப்பட்டு வரமாட்டார்கள்' என உலகவங்கி திட்டத்தை கைவிடும் அல்லது அரசதரப்புடனேயே

> **தமிழர் பிரதிநிதிகள் முதலில் ஓரணியில் நிற்கட்டும். அவர்கள் ஓரணியில் நிற்பார்களேயானால், தமிழர் பிரதிநிதிகளின் ஒருஅணியை வெளித்தரப்பால் பயன்படுத்த முடியாது. மக்கள் நலன் என்ற ஒன்றை மட்டுமே அவர்கள் இலக்காக வைத்தால் வில்லங்கத்தில் பாதி இல்லாமலாகிவிடும்.**

பேசி திட்டத்தை முன்னெடுக்கும்.

அந்த சமயத்தில் குய்யோ முறையோ என தலையிலடித்து ஒப்பாரி வைப்பார்கள். இது அரசியல்வாதிக்கும் பொருந்தும். மக்களிடம் கருத்தை காவிச்செல்பவர்களிற்கும் பொருந்தும். நமது அரசியல்வாதிகளும் அதைத்தான் செய்கிறார்கள். சமூகவலைத்தளங்கள், ஊடகங்களிலும் அதுதான் நடக்கிறது.

எப்பொழுதும் எதையாவது பேசிக் கொண்டேயிருக்க வேண்டும் என்றுதான் நமது அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். பேஸ்புக்கில் இருப்பவர்கள், கருத்துக்களை வெளியில் கொண்டு செல்பவர்கள் எப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். இதன் விளைவாக நடக்கும் விபத்திது.

யாழ்ப்பாண நகரஅபிவிருத்தியில் ஒவ்வொருவரின் பங்கும் என்ன?

அரசியல்வாதிகளிற்கு பெரும் பங்குண்டு. வெளியார் தமது நிகழ்ச்சி நிரலின்படி தமிழ் அரசியல்வாதிகளிற்கிடையில் பிரிவை உண்டு பண்ண எத்தனிக்கிறார்கள், கணிசமானளவு அதில் வெற்றியும் பெற்றுவிட்டார்கள் என்று எண்ணத்தோன்றும் விதமான சம்பவங்கள்தான் அண்மையில் நடக்கின்றன. மாகாணசபைக்குள் நடக்கும் குத்துவெட்டுக்கள் அதற்கு உதாரணம். ஒருதரப்பை வீழ்த்தும் இன்னொரு தரப்பின் நிகழ்ச்சி நிரலால் தமிழர்கள் ஒருபோதும் வெற்றியடையவில்லையென்பதுதான் இதுவரையான வரலாற்றிலிருந்து தமிழர்கள் கற்க வேண்டிய பாலபாடம். தமிழர் பிரதிநிதிகள் முதலில் ஓரணியில் நிற்கட்டும். அவர்கள் ஓரணியில் நிற்பார்களேயானால், தமிழர் பிரதிநிதிகளின் ஒருஅணியை வெளித்தரப்பால் பயன்படுத்த முடியாது. மக்கள் நலன் என்ற ஒன்றை மட்டுமே அவர்கள் இலக்காக வைத்தால் வில்லங்கத்தில் பாதி இல்லாமலாகிவிடும்.

சமூகவலைத்தளங்களால் எதையும் சாதிக்க முடியுமென்பதை காலம் எழுதி பலகாலமாகிவிட்டது. என்றாலும் நம்மவர்கள் பலர் இன்றும் லைக் பண்ணவும், பெண்களின் புகைப்படத்திற்கு'வாவ் அவ்சம்' என கொமண்ட் அடிக்கவும்தான் பாவிக்கிறார்கள். எஞ்சியவர்கள், கூட்டங்களிற்கு யார் போனார்கள் யார் போகவில்லையென்ற கட்டைப்பஞ்சாயத்தில் ஈடுபடுகிறார்கள்.

சமூகவலைத்தளங்களை பாவிப்பது மக்கள். சமூகவலைத்தளத்தின் குரல் வலிமையானது. சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி ஆட்சிமாற்றங்களையே நிகழ்த்தலாம் என்றபோது, நீங்கள் வாக்களித்து தேர்வுசெய்த உள்ளூர் அரசியல்வாதிகளை ஏன் வழிப்படுத்த முடியாது?

இதற்கு முதலில் சமூகவலைத்தளங்களில் இயங்குபவர்கள் குறுகிய அரசியல் பார்வைகளை கடந்து, பரந்து சிந்திப்பவர்களாக வேண்டும். சமூக அக்கறை கொண்டவர்களாக வேண்டும். அதற்கு ஏற்ப தம்மை சிறிய எண்ணிக்கையானவர்கள் தகவமைத்து கொண்டாலே போதும். பெருமளவானவர்களை வழிநடத்த முடியும்.

சமூகவலைத்தள பாவனையாளர்களே, இப்பொழுது உங்களிற்கு ஒரு சந்தரப்பம். யாழ்நகர அபிவிருத்தி உங்கள் முன்னுள்ள களம். அரசியல்வாதிகளின் குழப்பங்களை ஆரம்பத்திலேயே காண்கிறோம். உங்கள் நகரம் எப்படியிருக்க வேண்டும்? நீங்களே முடிவு செய்யுங்கள். உங்கள் குரல்களை எதிரொலிப்பவர்களாக மட்டும் செயற்பட அரசியல்வாதிகளை வழிப்படுத்துங்கள்.


நாடியா
nadiyanice@yahoo.com



கடற்படை அதிகாரியை திட்டிய காட்சி

# கூண்டுக்கு வெளியில் வந்த சிங்கங்கள்





கிழக்கு முதல்வர் செய்னுலாப்தின் நஷீர் அஹமதுதான் கடந்த வாரமும், இந்த வாரமும் ஊடகங்களின் முன்பக்க செய்தியாக இருக்கிறார். அடுத்த வாரமும் அவர்தான் இருப்பார். வடக்கு முதல்வர் தமிழீழ பிரகடனம் செய்தால் கிடைக்கும் பரபரப்பும், கொந்தளிப்பும் கிழக்கு முதல்வரிற்கு இப்பொழுது கிடைத்துள்ளது. நிகழ்வொன்றில் அவர் கொந்தளித்ததே இத்தனை பரபரப்பிற்கும் காரணம்.

கிழக்கு முதல்வர் ஏற்படுத்தியுள்ள பரபரப்பு மிகப்பெரியது. வரதராஜப்பெருமாள் செய்த தமிழீழ பிரகடனத்திற்கு அடுத்த சர்ச்சைக்குரிய பெரிய பரபரப்பு இது. இதன் எதிரொலி மிகக்கடுமையாக உள்ளது.

திருகோணமலை சம்பூர் மகாவித்தியாலத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் இந்த சர்ச்சை ஏற்பட்டது. அமெரிக்க தூதர் அடுல் கெசாப், கிழக்கு ஆளுனர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வில் முதல்வர் கடற்படை உயரதிகாரியொருவரை மேடையில் வைத்து திட்டினார். மிகக்கடுமையாக திட்டி, அதிகாரியை வெளியில் போக சொன்னார்.

அந்த வீடியோ வெளியாகி இணையங்களிலும்,சமூகவலைத்தளங்களிலும்வைரலாக பரவியது. 'சிங்கத்தை போட்டோவில பார்த்திருப்பாய்.. ரிவியில பார்த்திருப்பாய்.. வெறித்தனமா மேடையில பார்த்திருக்கியா.. பார்த்திருக்கியா' என சமூக வலைத்தளங்களில் ஒரு பகுதியினர் கொண்டாட, 'நாட்டை மீட்ட படைவீரர்களை பகிரங்கமாக அவமதிக்கும் புதிய அரசு' என இன்னொரு தொகுதி கொதிக்க ஆரம்பித்துள்ளது.

இதன் இறுதிநிகழ்வாக கிழக்கு முதல்வர் முப்படையினரின் முகாம்களிற்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பு அறிவித்துள்ளது.அவர் பங்குகொள்ளும் நிகழ்வுகளில் முப்படையினர் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

முதல்வர் திட்டியவீடியோதான்வெளியாகியதே தவிர, முதல்வர் திட்டுவதற்கு காரணமாக அமைந்த சம்பவத்தின் வீடியோ வெளியாகியிருக்கவில்லை. அன்றைய நிகழ்விற்கு சென்றதான் அவமதிக்கப்பட்டதாக முதல்வர் கருதும் விதமான சம்பவமொன்று மேடையில் நடந்துள்ளது. அமெரிக்க தூதர், ஆளுனரை தொடர்ந்து மேடையில் ஏறிய முதல்வரை கடற்படையினர் தடுத்து விட்டனர். முதல்வரை அடையாளம் தெரியாமல் தடுத்தனரா அல்லது வேண்டுமென்று தடுத்தனரா என்பது தெரியவில்லை. எனினும், ஆளுனரின் அதிகரித்த தலையீடு பற்றி கிழக்கு மாகாணசபையும் பகிரங்கமாக முணுமுணுக்க தொடங்கியுள்ள நிலையில், திட்டமிட்ட அவமானமாக முதல்வர் கருதியிருக்கவும் கூடும்.

பின்னர் இந்த நிகழ்விற்காக கிழக்கு முதல்வர் வருத்தமும் தெரிவித்திருந்தார். ஆனால் சர்ச்சை ஓய்ந்தபாடாக இல்லை.

ஏற்கனவே வடக்கு முதல்வர் என்றால் தென்னிலங்கையில் ஆகாதாவர் என்ற நிலையிருக்கும்போது, கிழக்கு முதல்வர் அவரை 'ஓவரேக்' செய்து முன்வரிசையில் இடம்பிடித்துள்ளார்.

இந்த சர்ச்சை தோன்ற பிரதான காரணம் மாகாண நிர்வாகங்களிற்கு உள்ள வரையறுக்கப்பட்ட தன்மையே. மாகாணநிகழ்வுகளை மாகாணங்களே நடத்தும், நிர்வகிக்கும் தன்மை ஏற்படுத்தப்பட்டால் இப்படியான சர்ச்சைகள் தோன்ற வழியிருக்காது. வடக்கு, கிழக்கு மாகாணசபைகள் வெற்றிகரமான மாகாணசபைகளா என்று கேட்டால் அது யோசிக்க வேண்டிய விடயம். அதிலும் கிழக்கு மாகாணம் ஓரளவு தேறும். வடக்கில் இன்னும் நிலவரம் மோசம்.

இதற்கு தனியே மாகாணசபைகளை குற்றம் சொல்லி பலனில்லை. மாகாணங்களை சுயாதீனமாக செயற்பட விடாமல், அடிக்கடி தொந்தரவு கொடுத்து எப்பொழுதும் பதற்ற நிலையை பேணி அரசுகள் செய்யும் சூழ்ச்சி கவனிக்கத்தக்க ஒன்று. மாகாணசபைகளிற்கும் அரசுகளிற்குமிடையிலான பனிப்போரில் ஆளுனர்களின் பங்கு என்னவென்பது எல்லோருக்கும் தெரியும். இதுதான் வடக்கிலும் நடக்கிறது. கிழக்கிலும் நடக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் காலத்து நிலைமைகளுடன் ஒப்பிடும்போது இப்பொழுது நிலைமையில் நிறைய மாற்றங்கள் உள்ளன. எனினும் இதில் கவனிக்கத்தக்க விடயம், மாகாணசபைகளின் முரண்பாடு. வடக்கு மாகாணசபையை கைவசம் வைத்துள்ளது தமிழ்தேசிய கூட்டமைப்பு. அந்த கட்சி மத்தியில் அரசுடன் நெருக்கமான உறவை பேணுகிறது. ஆனால் மாகாணசபைக்கும் அரசுக்குமான உறவு கிட்டத்தட்ட பகைதான். கிழக்கு நிலவரமும் கிட்டத்தட்ட அதுதான். முஸ்லீமகாங்கிரஸ் அரசின் பங்காளி கட்சி. ஆனால் மாகாணத்தை நிர்வகிக்கும் முஸ்லீம்காங்கிரஸ் பகிரங்கமான விமர்சனங்களையும் அதிருப்தியையும் வெளிப்படுத்த தொடங்கிவிட்டது.

இந்த நிலை அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா அல்லது உரிமைகளை எதிர்பார்க்கும் மாகாணசபைகள் எதிர்கொள்ளும் இயல்பான பிரச்சனையா என்பதுதான் ஆராயப்பட வேண்டியது. எப்படியென்றாலும் அது விவாதத்திற்குரியதே. ஏனெனில், அரசு திட்டமிட்டு உருவாக்கும் நெருக்கடியெனில் மாகாணசபையை நிர்வகிப்பவர்களை அரங்கிற்கு வெளியில் அகற்ற முயல்கிறார்கள் என்று அர்த்தம். இயல்பான பிரச்சனையெனில்,மாகாணசபை முறைமையில் சிக்கலென்று அர்த்தம்.

எல்லா சர்ச்சைகளிற்கும் அப்பால் கிழக்கு முதல்வர் சமூகவலைத்தள கொண்டாட்டகாரர்களிற்கு இப்பொழுது நிஜ சிங்கம். ஆனால் இதில் இன்னொரு அர்த்தமும் உள்ளது. சிங்கம் எங்கு நிற்கிறதென்பதுதான். அது காட்டிலா, பூங்காவிலா என்பதை பொறுத்துதான் அதன் அர்த்தம் மாறுபடும்.

எப்படியோ சிங்கங்களை ரிவியில் பார்க்கும் வரை யாருக்கும் சிக்கலிருப்பதில்லை. கூட்டிற்கு வெளியில் வந்தால்த்தான் எல்லோருக்கும் சிக்கல்.





அண்மையில் பெய்த அடைமழை காரணமாக நெடுங்கேணி பிரதேசத்தில் பப்பாசி செய்கை பெரும் பாதிப்படைந்துள்ளது. ஒலுமடு, கற்குளம், பட்டிக்குடியிருப்பு, சேனைப்புலவு, கீரிசுட்டான், துவரங்குளம் பகுதிகளிலேயே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



# மக்கள் பணத்தை ஆட்டையை போட்டார்களா அரச அலுவலர்கள்?

நரேஜி

ஊடகங்களினதும், அதிகாரிகளினதும் பார்வையில் அவ்வளவு விரைவாக சிக்காத வன்னியின் கிராமங்களில் என்ன நடக்கிறது? பரவலான ஊடக வெளிச்சம் படராத அந்தப்பகுதியில் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக எமது ஊடகவிய லாளர் குழுவொன்று சென்றது. அங்கு சென்ற எமது குழுவினரிற்கு கிடைத்த அதிர்ச்சி விவகாரமிது.

இறுதி யுத்தத்தில் சிக்கி, முள்ளிவாய்க்கால் மாபெரும் மனிதப்பேரவலத்தில் சிக்கி, அகதி முகாம் வாழ்க்கையையெல்லாம் முடித்துக் கொண்டு சொந்த இடம் திரும்பிய மக்களின் வாழ்வில் அதிகாரிகள் விளையாடினார்களா? காலம் கைவிட்டதா? படிப்பவர்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

யுத்தத்தின் பின்னர் முகாம்களில் இருந்த பலர் அரச வீட்டுத்திட்டம், பொருளாதார விருத்திக்கான உதவி என பல ஆசைவார்த்தைகளோடு குடியேற்றப்பட்ட னர். இன்றும் பலருக்கு அந்த உதவிகள் கிடைக்காத நிலையில் வாழ்வதற்காக போராட, இன்னும் சிலர் தமக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உதவிகளை அரச அதிகாரிகள் ஆட்டையைப் போட்ட நிலையில் வீடின்றி தவிக்கும் பரிதாப நிலையிலுள்ளனர்.


அவ்வாறான துன்பங்களுடன் வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் வடக்கு, கனகராயன்குளம் வடக்கு, நைனாமடு உள்ளிட்ட சில பகுதிகள் உள்ளன.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புளியங்குளம் வடக்கு பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். அப்போது அரசால் வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலும், மக்களது மண் வீடுகளிலும் அவர்கள் மீள் குடியேறினர். இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் தமக்கும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த இம் மக்களில் பலருக்கு ஏமாற்றமே மிஞ் சியிருந்தது. இந்நிலையில் கொட்டும் மழைக்கும், கொளுத்தும் வெயிலுக்கும் தாக்கு பிடிக்க முடியாது அவர்களது தற்காலிக கொட்டகைள் பல 7 வருடங்கள் கடந்த நிலையில் இன்றும் ஊசலாடிக் கொண்டிருக் கின்றன. சிலரது வீடுகள் இன்றோ, நாளையோ இடிந்து விழுவதற்காக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றன. மழை காரணாமாக இவர்களது வீடுகள் பாதிப்படைந்த நிலையில் அனர்த்த முகாமைத்துவ பிரிவால் சிலருக்கு ஒரு லட்சம் ரூபாய், சிலருக்கு இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியில் வீடுகளை அமைக்கவும் புனரமைக்கவும் நிதி வழங்கப்பட்டிருந்தது.

**ரி.என்.சூரியராஜா**
மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர்
வவுனியா



**பிரதேசசெயலகத்தினால்த் தான் இந்த திட்டத்தை முன்னெடுத்தோம். அவர்கள் தான் இதற்கு பொறுப்புகூற முடியும். ஒரு பிரதேசத்தில் இருந்து எமக்கும் முறைப்பாடு வந்ததுதான். சமுர்த்தி அலுவலரைப்பற்றியது.**



பாதியில் நிற்கும் வீடு

அதனை சமுர்த்தி ஊடாக நடைமுறைப் படுத்தியதால் சமுர்த்தி வீடு என்றே எல்லோரும் அழைத்தனர். மழை நீரை வீட்டிற் குள் இருந்தே ஏந்தக் கூடியதாகவும், இடிந்து விழும் நிலையிலும் இருந்த கொட்டகைக்குள் வாழ்ந்த மக்கள் கொஞ்சப் பணம் என்றாலும் அதை வைத்து சின்ன அறை கட்டி வாழலாம், பிள்ளைகளை அதற்குள் விட்டாவது படிப் பிக்கலாம் என இருந்த நிலையில் அரச உத்தி யோகத்தர் சிலர் மேற்கொண்ட செயற்பாடு அம் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த வீடுகளுக்கான பணம் அரசாங்கத் தால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் சமுர்த்தி வங்கிக் கணக்குகளுக்கு போடப் பட்டிருந்தது. அப் பணத்தை மக்கள் எடுத்து வீடு கட்டாது செலவு செய்து விடுவார்கள் எனக் கூறி அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் அவை கட்டிக் கொடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. பின்னர், வங்கிக்கு பணம் வந்ததும் மக்களை அழைத்த குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் வங்கியில் பணத்தை எடுத்து தருமாறு மக்களுக்கு கூற, வீடு வரும் சந்தோசத்திலும் மக்களும் பணத்தை கொடுத்துள்ளனர். இது நடந்து இரண்டு வருடங்கள் ஆகின்ற போது கூட இன்னும் பலருக்கு வீடில்லாத அவலநிலை தொடர்கிறது. இப் பகுதியில் மட்டும் சுமார் 15 குடும்பங்கள் வரையில் பாதிக்கப் பட்டுள்ளதாக அறிகின்றோம்.

அந்த கிராமத்தில் யாரை கேட்டாலும் சமுர்த்திக்காரர் எங்களை ஏமாற்றிவிட் டார்கள் என்றுதான் புகார் சொல்கிறார்கள். சிலர் முகம் காட்டி பகிரங்கமாகவே பிரச்ச னைகளை பேசுகிறார்கள். பெரும்பாலா னவர்கள் முகம்காட்ட தயங்கினார்கள். காரணம், உண்மையைச் சொன்னால் அதிகாரிகளால் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம். இன்னும் ஒரு வீட்டிற்கு சென்றோம். அவர்கள் சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கொடுத்த ஒரு லட்சம் பணத்தை கொஞ்சம், கொஞ்சமாக வாங்கி தாமும் பணம் போட்டு வீடு ஒன்றை கட்டியுள்ளார்கள். இன்னும் ஒரு தொகை பணம் கொடுக்க வேண்டி யுள்ளது. அதை தந்தால் வங்கலாம். ஏழைகளின் காசு தான் வேண்டும் என்றால் கோவிலுக்கு போனதாய் இருக்கட்டும் என அங்கலாய்த்தார்.

இது தவிர, இன்னுமொரு இடத்தில் வீட்டிற்கான பணம் பெறப்பட்டுவிட்டது. ஆனால் அந்த வீடு கட்ட வேண்டிய இடத்தில் ஒரு லோட் மணலும், ஒரு லோட் கருங்கல்லும் மட்டுமே உள்ளது. இரண்டு வருடத்திற்குள் அது தான் நடந்துள்ளது. மிகுதி வேலையும், மிகுதிப் பணமும் இன்று வரை......?

ஆக மொத்தத்தில் அரசாங்கத்தால் மக்களின் வாழிடப் பிரச்சனையைப் போக்க வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட பணம் அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரின் பொக்கற்றுக்குள் சென்றுள்ளது என்றுதான் மக்கள் சந்தேகிக்கிறார்கள். அதை அறிந்தும் பொறுப்பு வாய்ந்த அதிகாரி மௌனமாக இருக்கிறார். அப்படி எனில் அவர்களுக்குள் என்ன டீல்? அங்கு நடப்பது என்ன....? என்பதுதான் மக்களின் கேள்வி.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளேஞ் நீங்கள் பொறுப்பாக செயற்பட வேண்டும்.

**ப.வள்ளியம்மா**



ப.வள்ளியம்மா

மீள்குடியேறிய காலத்தில் இருந்து இந்த மண்கொட்டிலில்தான் இருகிறேன். மெல்ல மெல்ல ஒவ்வொரு மழைக்கும் இடிந்து விழுகிறது. எனக்கு 2014 ஆம் ஆண்டு சமுர்த்தி வீடு தந்தார்கள். அதற்காக ஒரு லட்சம் பணம் எனது சமுர்த்தி வங்கிக்கு வந்தது. 50,000 வீதம் இரண்டு தரம் வந்த காசை எடுத்து எங்க ஊருக்கு பொறுப்பான சமுர்த்தி தம்பியிடம் கொடுத்தன். அவர் 2 வருசமா வீட்டைக் கட்டுகிறார். நான் தையல் செய்து தான் பிழைப்பு நடுத்துகிறேன். இப்ப தையல் மிசின் வைத்து தைக்க, துணியை வைத்து வெட்ட இடமில்லாமல் சிறிய மண் கொட்டிலுக்குள் இருக்கின்றேன். என்ர சமுர்த்தி வீடு கட்டப்பட்டுள்ள போதும் இன்னும் கூரை முழுமை படுத்தப்படவில்லை என்பதுடன் கதவுகள் கூட போடப்படவில்லை. அரசாங்கம் தாரது கூட எங்களுக்கு கிடைக்குதில்லை.

**சின்னம்மா**



சின்னம்மா

என்னுடைய வீடு 2013 ஆம் ஆண்டு யானை தாக்கி உடைந்துவிட்டது. அரச அதிகாரிகள் வந்து அதை பார்த்துவிட்டு போனார்கள். பின்னர் எனக்கு சமுர்த்தி வீடு தருவதாக கூறினார்கள். அதன்படி சமுர்த்தி வீட்டுக்கு என்னுடைய சமுர்த்தி புத்தகத்தில் ஒரு லட்சம் போடப்பட்டது. அதை எடுத்து தந்தால் வீட்டை கட்டி தருவதாக எமது பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். அவசர அவசரமாக சமுர்த்தி வங்கிக்கு என்னை அழைத்ததால் நான் அங்கு போய் ஒரு லட்சம் ரூபாய் பணத்தை எடுத்து சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கொடுத்தேன். 2014 ஆம் ஆண்டு அது நடந்தது. இன்று இரண்டு வருடம் ஆகின்ற போது கூட எனக்கு வீடு கட்டித் தரவில்லை. அத்திவாரத்தில் ஒரு அறைக்காக ஐந்து வரி கல்லு மட்டும் வைத்து கட்டியிருக்கு. மிகுதியை கேட்டால் இன்று, நாளை என நாளை கடத்துகிறார்கள். பிரதேச செயலகத்தில் போய் கூட கேட்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வீடு வரவில்லை. வருத்தக்கார கணவருடன் மகன் வீட்டில் இருந்து கஸ்ரப்படுகிறேன். காசை என்னிடம் தந்திருந்தால் கூட வீட்டை கட்டியிருப்பேன். ஒரே தடவையில் நான் ஒரு லட்சம் எடுத்து கொடுத்திருந்தேன். ஆனால் சமுர்த்தி வங்கிப் புத்தகத்தில் கூட வேறு வேறு திகதி போட்டு 50,000 ரூபாய் வீதம் இரண்டு தரம் தந்ததாக எழுதியுள்ளார்கள். புத்தகம் கனநாளாக சமுர்த்தி உத்தியோகத்தரிடம் தான் இருந்தது.

தற்போது தான் என்னிடம் தந்துள்ளார்கள். இப்போது வீடும் இல்லை... காசும் இல்லை. (கண்ணீர் விட்டு அழுகிறார்)

**எஸ்.சிறிதரன்**



எஸ்.சிறிதரன்

2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வீடு கட்டுவதற்கு என ஒரு லட்சம் ரூபாய் பணம் எங்கட சமுர்த்தி வங்கிக் கணக்குக்கு போடப்பட்டிருந்தது. பிரதேச செயலகத்தால் சமுர்த்தி உத்தியோகத்தரை அந்த வீட்டை கட்டிக் கொடுக்க நியமித்து இருந்ததால் நாம் அவரிடம் ஒரு லட்சம் பணத்தை கொடுத்தோம். அதற்கு கட்டின வீடு அரைகுறையாக இருக்கு. அதை அவரது மேலதிகாரி மற்றும் பலர் வந்து பார்த்து போட்டோ எடுத்துச் சென்றவர்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. நாங்கள் இருக்கிறதுக்கு இடம் இல்லாமையால் கொஞ்சம் கொஞ் சமாக திருத்தி போட்டு இருக்கிறம். போன காசு போனது தான். நாங்கள் அவரை கேட்டால் இந்தக் கிழமை வாறன், அடுத்த கிழமை வாறன் என ஒரே சாட்டுப் போக்கு சொல்கிறாரே தவிர வரவில்லை. அவர்களுடைய மேலதிகாரிகளுக்கும் இது தெரியும். சமுர்த்தி உத்தியோகத்தர் வந்து கட்டி தருவார் என்றார்கள். இன்று வரை எதுவும் நடக்கவில்லை.

**எஸ்.இராமு**



எஸ்.இராமு

எனக்கு வீட்டுத்திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் வந்தது. அதை எடுத்து சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கொடுத்தேன். இன்று எட்டு வரி கல்லு கட்டடப்பட்டுள்ளது. அந்த ஒரு லட்சத்துக்கு இரண்டு வருசத்துக்க 8 வரி கல்லு தான் கிடைத்தது. மிகுதியை கட்டித் தருமாறு கேட்டால் இன்று நாளை என சொல்கிறார்கள். கடைசியில் அரச அதிகாரிகளே இப்படி செய்தால் நாம் என்ன செய்வது?

**பரந்தாமன்**
பிரதேசசெயலர்
வவுனியா வடக்கு



இது பற்றிய முறைப்பாடு வந்தது. நேரில் சென்று பார்த்து விசாரணை செய்தோம். அது அவர்களின் பிழைதான். அனைத்து வேலைகளையும் விரைவுபடுத்தி முடிக்குமாறு சமுர்த்தி அதிகாரிகளிடம் கூறியிருக்கிறோம். ஒரு மாத தவணை கொடுத்துள்ளோம். இன்னும் ஒரு வாரத்தில் தவணை முடிகிறது. அதற்குள் முடிப்பார்கள் என நம்புகிறேன்.




# சிறிதரனுடன் இருக்கும்போது மக்களிற்கு சேவை செய்ய முடியவில்லை

## முன்னாள் 'வலதுகை' பொன்.காந்தன் பரபரப்பு பேட்டி

செல்வம்
selvam@deepam.lk

பொன்னம்பலம் லக்ஷ்மிகாந்தனை அவ்வளவாக தெரிந்திருக்காது. ஆனால் பொன்.காந்தன் என்றால் அரசியல் வட்டாரங்களிற்குள் தெரிந்திருக்கும். கிளிநொச்சியில் தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பி சிறிதரனின் வலதுகை. பிரச்சார பீரங்கி. சிறிதரனின் கூட்டங்களில் கண்ணிமைக்காத மெய்ப்பாது காவலராகவும் நிற்பார். சிறிதரனின் அரசியல் செயற்பாட்டில் பொன்.காந்தன் இல்லாமல் ஒரு நகர்வும் இருக்கவில்லை.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கிளிநொச்சியில் சிறிதரனின் அலுவலகத்தை முற்றுகையிட்ட பாதுகாப்புதரப்பினர் பொன்.காந்தனை பலமாதங்கள் சிறையிலிட்டனர். மொத்தத்தில் சிறிதரனிற்காக எதையும் செய்ய தயாராக இருந்த தொண்டனாக இருந்தார்.

திடீரென சிறிதரனின் முகாமிலிருந்து வெளியேறி பரபரப்பை கிளப்பியுள்ளார் பொன்.காந்தன். பின்னர் ரெலோவுடன் இணைந்து, கிளிநொச்சி அமைப்பாளராகி, சிறிதரனிற்கு எதிர்க்கடை திறந்துள்ளார். இப்பொழுது கிளிநொச்சியில் பரபரப்பான அரசியல்போட்டிக்களம் திறக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல்ப்பணிகளில் தீவிரமாக இருந்த பொன்.காந்தனை சந்தித்தோம்.

**தீபம்: நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுடன் நெருக்கமாக இருந்தீர்கள். கிளிநொச்சியில் அவருக்கு நெருக்கமானவராகத்தான் அறியப்பட்டிருந்தீர்கள். திடீரென அவரை விட்டு விலகிவிட்டீர்களே. ஏன்?**

**பொன்காந்தன்:** சிறிதரனுடன் இருக்கும் போது எனக்குகட்டுப்பாடு இருந்தது. இதனால் மக்களுக்கு சேவை செய்ய முடியாமல் இருந்தது. மக்களுக்கு பணியாற்றுவதற்கு பரந்து பட்ட வெளி எனக்குத் தேவைப்பட்டது. அதனால் சிறிதரனிடம் இருந்து வெளியே வந்தேன். 2010 இலிருந்து 2015 வரை சிறிதரனின் செயலாளராக பணியாற்றினேன். இரண்டாவது தடவையாக சிறிதரன் பதவி யேற்ற போது நான் அவரின் செயலாளராகஇருக்கவில்லை. அப்பொழுது கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் உப தலைவராக இருந்தேன். தமிழரசுக் கட்சியில் எனக்கு எந்தவிதமான கோபதாபங்களும் இல்லை. கட்சியின் தலைமையிலோ நாடாளு மன்ற உறுப்பினர்களிலோ எனக்கு கோபதாபம் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்தில் உள்ள சில குறைபாடுகளால் மக்களுக்கு சேவையாற்றுவதில் சில இடையூறுகள் இருக்கின்றன. அதனால் நான் அதில் இருந்து விலத்தி விட்டேன். தனிப்பட்ட பிரச்சினை எதுவும் இல்லை.

**தீபம்: சில இணையத்தளங்கள் உங்கள் மீது கடுமையான தாக்குதல்கள் நடத்துகின்றனவே?**

**பொன்காந்தன்:** அரசியலில் இது சாதாரண விடயம். நானும் அதை பெரிதுபடுத்தவில்லை. மக்கள் தீர்மானிப்பார்கள். தேர்தலை, பதவியை குறிவைத்து நான் அரசியல் செய்யவில்லை. அதற்காக தேர்தல் கேட்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அதை நோக்கிய அரசியல் நான் செய்யவில்லை. கதிரைக்காகவே மக்களை பயன்படுத்துவதில் எனக்கு சம்மதம் இல்லை. கடந்த ஐந்துவருடங்களில் இணையத்தளங்கள் என்னை தாக்கவில்லை. நான் சிறிதரனை விட்டு வெளியேறியதும் தாக்குதல் நடக்கிறதென்றால், அது வேறு பிரச்சனை.

**தீபம்: சிறிதரனிடமிருந்து பிரிந்து வந்ததன் பின்னர் விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி எழுதியதாக கூறப்பட்ட "கூர்வாளின் நிழலில்" புத்தகத்தை கிளிநொச்சியில் வெளியிட்டீர்கள். ஏன் அந்த புத்தகத்தை வெளியிட முயற்சித்தீர்கள்? அந்தப் புத்தகத்தைப் பற்றிய அதிக அதிருப்திகள் கிளம்பியதே. தமிழினி தான் அதை எழுதினாரா?**

**பொன்காந்தன்:** தமிழினியின் புத்தகம் தொடர்பாக எந்தக் கருத்தையும் கூற விரும்பவில்லை. புத்தகத்தின் உரிமை தமிழினியின் கணவருடையது. நான் தலைமை தாங்கினேன். அவ்வளவு தான். அது அவர்களுடைய சுதந்திரம்.

**தீபம்: சிறிதரனுடன் பிரிந்து ஏன் ரெலோவுடன் இணைந்தீர்கள்?**

**பொன்காந்தன்:** சிறிதரனுடன் இருந்து என்னால் இயங்க முடியாமல் போனதால் ரெலோவுடன் இணைந்து கொண்டேன். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணியாற்றுவதற்கு எனக்கு ஒரு வழி தேவைப்பட்டது. சிறிதரனிடம் இருந்து விலகுவது தவிர்க்க முடியாமல் போய்விட்டது.

வெளியே வந்து தமிழீழ விடுதலை இயக்கத்தினுடைய (ரெலோ) நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடைய கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராகியுள்ளேன். இந்த இயக்கத்தினுடைய அடிப்படை கொள்கை விடயங்களுடன் என்னை சமரசம் செய்ய முடியும் என எண்ணுகிறேன்.

**தீபம்: விடுதலைப் புலிகளின் அனுதாபியாக உங்களை அடையாளப்படுத்துபவர். விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சிறிசபாரத்தினத்தின் நினைவு தினத்தில் கலந்து கொண்டீர்கள். அந்த நினைவு தினத்தில் கலந்து கொண்டிருந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?**

**பொன்காந்தன்:** தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மதிப்புக்குரிய வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் கடந்த காலங்களில் முரண்பட்டுக் கொண்டிருந்த அதாவது எதிரும் புதிருமாக இருந்த சகோதர இயக்கங்களை அழைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினவர். அது கிளிநொச்சி மண்ணில்தான் உருவாகி இயங்கி வருகிறது. இயக்கங்களே முரண்பட்டு, பின்னர் ஒன்றாகி இருக்கும் போது நாங்கள் பங்கு பற்றுவது பெரிய விடயமல்ல. எப்பவோ மன்னிக்கப் பட்டு சமரசம் வந்துவிட்டது. இதில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல.எவ், புளொட் என்ற வேறுபாடு எதுவும் இல்லை. இதற்குள் இருந்துதான் மக்களுக்காக பணியாற்ற வேண்டும்.

மக்களுடைய வாழ்வாதரம் மேம்படுத்தப்பட வேண்டும். இன்னமும் பட்டினியில் தான் மக்கள் இருக்கிறார்கள். கிளிநொச்சியில் இருக்கிற மூளை முடுக்கில இருக்கிற கிராமங்களுக்கு நாங்கள் போறதில்லை. அங்கு சென்று அந்த மக்களை பொருளாதார ரிதியில் உயர்த்த வேண்டும். முன்னாள் போராளிகள் வறுமையில் வாடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கான பொதுக்கட்டமைப்பு தேவை எம்மிடம் இருக்க வேண்டும்.

# இயற்கையான முறையில் கருவண்டுக் கட்டுப்பாடு



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



கிளிரிசீடியா இலைகளிலுள்ள ஒரு வகை மணம் கருவண்டு தாக்கத்தினை அணுகவிடாது என்பது இலங்கைத் தென்னைச் செய்கையாளர்களின் கருத்து.

**இயற்கையான கருவண்டுக் கட்டுப்பாடு:**

1. ஒரு கிலோ ஆமணக்கு பிண்ணாக்கினை 5 லீற்றர் தண்ணீரில் ஊறவைத்து அதில் 60 மில்லி லீற்றர் வேட்டைக்கோ பூச்சிக் கொல்லியினையும் கலந்து, அதனை 5 சிறிய மண் பானைகளில் எடுக்கவும். ஒரு ஏக்கருக்கு 5 பானைகள் வீதம் மண் பானையின் மேற்புறம் தலைக்கு மேல் தெரியுமாறு புதைத்து விடவும், இரவு நேரங்களில் காண்டாமிருக வண்டுகள் இந்தப் பானைகளில் உள்ள ஆமணக்கு பிண்ணாக்கின் வாசனைக்கு கவரப்பட்டு எளிதில் அழிந்து விடும். ஒவ்வொரு மாதமும் பிண்ணாக்கு கரைசல் தயாரிக்க வேண்டும்.
2. துளசி இலை, புங்கமர இலை, பன்னம் இலைகளைப் பறித்து, மட்டை இடுக்குகளில் வைக்கலாம். குறிப்பிட்டகாலம் வரை கருவண்டு தென்னை மரத்திற்கு கிட்ட வராது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வேப்பங்கொட்டைத் தூளுடன் சம்பங்கி, மனல்மண் கலந்து 150 கிராம் அளவு வட்டுக்கு இடையில் வைக்கலாம்.
3. குரங்கு கட்டுப்பாட்டுக்கு இலந்தை மரமுள் கொப்பினைச் செருகிவிடவும்.
4. இந்தியாவில் கோயம்புத்தூரில்

**தென்னையில் நோய் வராமல் தடுப்பது:**

வேப்பம் இலைகள், மஞ்சள் இலைகள், பட்டிப்பூ இலைகள், கேம்பர் இன்டிக்கா,



அனோனாசமோன்சாபோன்றதாவரங்களின் இலைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மூலிகைத் தாவரத்தினை தென்னை மரத்தின் தென்னை மட்டைகளிலும், வேர்ப்பகுதிகளிலும் தெளிக்க வேண்டும். இதனால், தென்னைக்கு நோய் வராமல் தடுக்கலாம். (முற்காப்பு முறை)

**இரசாயன முறைகள் 01.**

ஒவ்வொரு ஓலைமட்டை அடியினுட்பகுதியிலும், குருத்துப் பகுதியிலும் 6 தொடக்கம் 8 நப்தலீன் உருண்டைகளைத் தூளாக்கி மண்ணுடன் கலந்து போடவும். அம்முறை வீட்டுத் தோட்டங்களுக்குப் பொருத்தமானது.

**சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினிகள்:**

3 வீதம் காபோபியூரான் குறுணல்களை 15 கிராம் அளவு கன்றுகளுக்கும், 30 கிராம் அளவு குறுணல்களை முதிர் மரத்திற்கும், ஒரு கைபிடி அளவு மணல் மண்ணுடன் கலந்து குருத்துப் பகுதிக்குள்ளும் மற்றும் ஓலை இடைவெளிக்குள்ளும் இடலாம். இம் மாதிரி ஒவ்வொரு மாதமும் செய்தல் வேண்டும். காபோபியூரான் தற்சமயம் தடை செய்யப்பட்ட பூச்சி நாசினியாகும்.

- எனவே, இதற்கு மாற்றீடாக தென்னை மரத்தின் குருத்துப் பகுதியினைச் சுற்றியுள்ள மட்டை இடுக்குகளுக்குள் 8 நப்தலின் வில்லைகளை (பூச்சி உருண்டை) தூளாக்கி மண்ணுடன் கலந்து போட்டு விடலாம்.
- அல்லது தென்னையின் அடிமட்டைப் பகுதிக்கு மட்டும் (மண்ணெண்ணை கலக்காத) கழிவு எஞ்சின் ஓயில் பூசுவதன் மூலம் தாக்க வரும் கருவண்டினைத் தடுக்க முடியும்.
- 10 வீதம் காபோசல்பான் ஒரு கன்றுக்கு 10 கிராமும், இளமரத்திற்கு 15 கிராம் என்ற அளவில் இடலாம்.

குறிப்பு: காபோபியூரான், யூரடான் ஜீ, குரேட்டர், என்ற வர்த்தகப் பெயர்களிலும், காபோசல்பான் சஸ்கன், மார்ஷல் என்ற பெயர்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எல்லா கிருமிநாசினிகளும் ஆபத்தானவை, எனவே அவதானமாகக் கையாளவும்.

கருவண்டினைக் கட்டுப்படுத்த பெரமோன் கட்டுப்பாட்டு முறை.

கருவண்டு தென்னைப் பயிர்சேய்கையின் பிரதான பீடை ஆகும். இவ் வண்டு தென்னங் கன்றுகளையும், இளம் தென்னை மரங்களையும் தாக்குகின்றது. இதனால் தென்னை மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், சில நேரங்களில் மரம் இறக்கவும் நேரிடும்.

கருவண்டு தாக்கத்தினைக் கட்டுப்படுத்த "பெரமோன்" தூண்டில் முறை தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் சிபார்சு செய்யப்பட்டு உள்ளது. பிரதேசத்திலுள்ள ஆண் பெண் வண்டுகள் இப்பெரமோனினால் ஈர்க்கப்பட்டு தூண்டிலில் சிக்கிக் கொள்ளும். (இனக்கவர்ச்சி ஓமோன் - Aggregation pheromone)

இம் முறை மூலம் தோட்டத்திலுள்ள கருவண்டின் குடித்தொகை படிப்படியாகக் குறையும். கருவண்டினைக் கட்டுப்படுத்த மேலும் பல சிபார்சு செய்யப்பட்ட முறைகள் இருப்பினும், இப்பெரமோன் கட்டுப்பாடு முறை ஒரு பெரிய பிரதேசத்தில் ஒரே தடவையில் நிறைய வண்டுகளைப் பிடிப்பதில் சாதகமாகவுள்ளது. ஒரு பெரமோன் குப்பி 5 ஏக்கர் தோட்டத்திற்கு ஒன்றாக வைக்கவும். இம் முறையில் இரண்டு வகையான தூண்டில்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- P.V.C குழாய் தூண்டில் முறை
- பிளாஸ்ரிக் வாளி தூண்டில் முறை

**P.V.C குழாய் தூண்டில் முறை.**

- 56 அடி உயரமானதும் 34 அங்குலம் விட்டமுடையதுமான pvc குழாய் ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.
- வண்டு உட்செல்வதற்கான குழாயின் ஒரு முனையில் இருந்து 10 அங்குலம், 28 அங்குலம் ஆகிய தூரங்களில் எதிரெதிர் திசைகளில் 4X3 அங்குலம் அளவுள்ள துவாரங்கள் இரண்டை ஏற்படுத்த வேண்டும்.
- pvc குழாயின் ஏதாவதொரு துவாரத்தின் அடிப்பகத்திற்குக் கீழ், சரியாக நடுவில் சிறுதுளை ஒன்றை இடவும். கம்பியொன்றால் கட்டப்பட்ட பெரோமோன் அடங்கிய பிளாஸ்டிக் குப்பியை அச்சிறுதுளையில் கட்டி pvc குழாயினுள் செலுத்த வேண்டும்.
- pvc குழாயின் கீழ் முனையை நன்றாக மூடியொன்றால், (pvc என்ட்கெப் அல்லது சட்டி அல்லது பிளாஸ்டிக் குவளை) மூடிக் கொள்ள வேண்டும்.

**பிளாஸ்ரிக் வாளி தூண்டில் முறை.**

- இம்முறைக்கு 12 லீற்றர் கனவளவுள்ள பிளாஸ்ரிக் வாளி ஒன்றும், கனமுடைய கல்வனைசு தகடுகள் இரண்டும் தேவைப்படுகிறது.
- 10.5 அங்குல அகலம் (வாளியின் வாயின் விட்டத்திற்கு சமமானது) 14 அங்குல நீளத் தகடுகள் இரண்டை வெட்டிக் கொள்ளவும். இத் தகடுகளின் ஒரு நீளப்பக்கத்தின் இரு முனைகளிலும், 4 அங்குல உயரமும், 2 அங்குல அகலமும் கொண்ட முக்கோணமான பாகங்களை வெட்டி அகற்றிக் கொள்ள வேண்டும்.
- ஒரு தகட்டில் நீளப்பக்கத்தின் நடுப்புள்ளியிலிருந்து 5 அங்குலம் ஆழத்திற்கு வெட்டொன்றை இடவும்.
- மேல் கூறப்பட்ட தகட்டை மற்றைய தகட்டின் மேல் வைத்து வெட்டி அகற்றப்பட்ட சதுரப் பகுதியை அடையாளம் இட்டுக் கொள்ள வேண்டும்.
- பின் மற்றைய தகட்டை முக்கோணப் பகுதிகள் வெட்டியகற்றப்பட்ட பக்கத்தின் நடுப்புள்ளியிலிருந்து அடையாளம் இடப்பட்ட சதுரப்பகுதி வரை வெட்டொன்றை இட வேண்டும். பின் அடையாளம்இடப்பட்டசதுரப்பகுதியை வெட்டியகற்றவும்.
- தகடுகள் இரண்டையும் ஒன்றின் மீது ஒன்றாக பிளவுகளின் ஊடாகத் திணிக்கவும். பின் பெரோமோன் அடங்கிய குப்பியை கம்பியைப் பாவித்து கட்டித் தொங்க விட வேண்டும்.
- வாளியின் துளைகளின் மட்டத்திற்கு சவர்க்காரக் கரைசலை நிரப்பவும்.

**பெரமோன் தூண்டிலை களத்தில் அல்லது பிரதேசத்தில் பொருத்தும் முறை.**

- 5 ஏக்கர் நிலத்திற்கு ஒரு பெரமோன் தூண்டிலைப் பயன்படுத்த முடியும்.
- இத் தூண்டிலானது பாதிக்கப்பட்ட களத்தினுள் பொருத்தலாகாது. அக் களத்தின் அல்லது பிரதேசத்தின் எல்லையில் வேலியில் அல்லது சற்றுத் தூரம் அமைந்துள்ள வெற்று நிலத்தில் பெரமோன் தூண்டிலானது பொருத்தப்பட வேண்டும்.
- pvc குழாயைப் பயன்படுத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் மரத்தூனொன்றை நாட்டி அதன் மீது pvc குழாயை நிலத்திற்கு செங்குத்தாகப் பொருத்த வேண்டும். அல்லது முதிர்ந்த தென்னை மரமொன்றுடன் pvc குழாயை அதன் துவாரங்கள் மறைக்கப்படாத வண்ணம் கட்ட வேண்டும்.
- பிளாஸ்ரிக் வாளியைப் பயன்படுத்தினால் நிலத்தில் நாட்டப்பட்ட தடியொன்றில் 67 அடி உயரத்தில் பலகைத் துண்டொன்றை அல்லது மரக்கிளை யொன்றை கிடையாக இருக்கும் வண்ணம் கட்டிக் கொள்ள வேண்டும். கயிறொன்றின் உதவியுடன் வாளியை அதில் தொங்க விடவும். அதன் பின் அவ்வாளியின் துவாரத்தின் மட்டத்திற்கு சோப்புக் கரைசலால் நிரப்பவும்.

**பெரமோன் தூண்டிலை நடைமுறைப்படுத்தும் முறை.**

- பெரமோன் தூண்டிலில் 710 நாட்களுக்குள் வண்டுகள் அகப்பட்டிருக்கும். pvc குழாய் அடிப்பாகத்திலுள்ள மூடியை கழற்றி அகப்பட்டுள்ள வண்டுகளை அழிக்கவும்.
- பிளாஸ்ரிக் வாளித்தூண்டிலில் சவர்க்காரக் கரைசலில் மூழ்கி இறந்த வண்டுகளை அகற்றி சவர்க்காரக் கரைசலையும் புதுப்பிக்கவும்.
- பெரமோன் தூண்டில்கள், இரண்டு கிழமைக்கு ஒரு முறையாவது பரிசீலித்து இறந்த வண்டுகளை அகற்றவும்.
- பெரமோன் 3 மாதங்கள் வரை வினைத்திறனாக வேலை செய்யும். அகப்படும் வண்டுகள் குறையும் பட்சத்தில் வேறொரு பெரமோன் குப்பியினைப் பயன்படுத்த வேண்டும்.
- இல்லாது அகப்படும் வண்டுகளின் எண்ணிக்கை குறைவடையும் வரை தொடர்ந்து பெரமோன் கட்டுப்பாட்டு முறையினை கடைப்பிடித்தல் நன்று.
- இப் பெரமோன் தூண்டிலை அவ்வப் பகுதி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.



பேரறிஞர் அண்ணாவுடன் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் 100

நெடுந்தொடர் 7

# இந்தி எதிர்ப்பு போராட்டமும் விமர்சனமும்

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** சிறைசென்றிருக்கிறார் என்பது பலர் அறிந்திராத செய்தி. இந்தி எதிர்ப்பு போராட்டம் தீவிரமாக இருந்தபோது அதில் எம்.ஜி.ஆர். கலந்து கொள்ளவில்லை என்று அவரைப் பற்றி விமர்சனங்கள் எழுந்தது உண்டு. அந்த சமயத்தில் 'ஆயிரத்தில் ஒருவன்' படப்பிடிப்புக்காக கோவா சென்றிருந்தார், அண்ணா மற்றும் திமுகவின் சம்மதத்தோடுதான்.

இந்தி மொழி திணிப்புக்கு எதிராக நீண்ட போராட்டத்தைத் தொடங்கி நடத்துவதற்கான ஆயத்தங்களில் 1960ம் ஆண்டு முதலே திமுக ஈடுபட்டது. திமுக பொதுக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டக் குழு அமைக்கப்பட்டது. 1960 ஜூலை 15ல் அறப்போராட்டக் குழு கூட்டம் ஈ.வெ.கி. சம்பத் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் போராட்டங்களில் கலந்து கொள்வதில் இருந்து மாணவர்கள், நடிகர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

'படிக்கும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடக் கூடாது. திமுகவினர் மீது வழக்குகள் போடப் பட்டால் அவர்களுக்கு உதவ வழக்கறிஞர்கள் தேவை. உயிர் காக்க வேண்டிய பொறுப்பு மருத்துவர்களுக்கு உண்டு. போராட்டத்தில் ஈடுபட்டு நம்முடைய கலைஞர்கள் சிறை செல்ல நேர்ந்தால் அதன் பிறகு 15 ஆண்டுகளுக்கு கலைத்துறை நம் கையை விட்டுப் போய்விடும். எனவேதான் இவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. கலைஞர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டதில் எம்.ஜி.ஆருக்கு கூட என் மீது கோபம்' என்று சென்னை கோடம்பாக்கத்தில் 1960 ஜூலை 31ம் தேதி நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா விளக்கம் அளித்தார்.

கலைஞர்களுக்கு விலக்கு அளிக்கப் பட்டதால் தான் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் எம்.ஜி.ஆர். கலந்துகொள்ளவில்லை. போராட்டம் தீவிர மாக இருந்ததால் 'ஆயிரத்தில் ஒருவன்' படம் வெற்றிகரமாக 100 நாட்களைக் கடந்து ஓடியும், விழா கொண்டாடப்படவில்லை. நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக விழா கொண்டாடப் படவில்லை என்று நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டது.

என்றாலும், இந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு முன்பாகவே எம்.ஜி.ஆர். சிறை சென்றிருக்கிறார். இதுபற்றி எம்.ஜி.ஆர். வெளியில் அதிகம் சொல்லிக் கொண்டதில்லை. 1958ம் ஆண்டு ஜனவரி 5ம் தேதி அப்போது பிரதமராக இருந்த நேரு சென்னை வந்தபோது அவருக்கு திமுக சார்பில் கருப்புக் கொடி காட்ட தீர்மானிக்கப் பட்டது. எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தில் நடிகர்களுக்கு உடைகள் தைப்பதற்காக இருந்த தையல் மெஷின்கள் மூலம் இரவு பகலாக கருப்பு கொடி தயாரிக்கும் பணி நடந்தது. போராட்டத்துக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது படலம் தொடங்கியது.



'கணவன்' படத்தில் சிறைக் கைதியாக எம்.ஜி.ஆர்.

அப்போது, நள்ளிரவில் எம்.ஜி.ஆர். கைது செய்யப்பட்டார். மேலும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி, நடிகமணி டி.வி.நாராயணசாமி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், வளையா பதி முத்துக்கிருஷ்ணன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். முதலில் எம்.ஜி.ஆரை சைதாப்பேட்டை காவல் நிலையம் கொண்டு சென்று காலையில் சென்னை மத்திய சிறையில் அடைத்தனர். எம்.ஜி.ஆர். 4 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். நேரு சென்னை வந்து சென்ற பின் எம்.ஜி.ஆர். விடுவிக்கப்பட்டார்.

சிறையில் இருந்தபோது சிறைச்சாலை விதிகளை எம்.ஜி.ஆர். முழுமையாக கடைபிடித்தார். சிறையில் சிவப்பு அரிசிச் சோறுதான். மற்றவர்கள் சாப்பிட முடியாமல் சங்கடப் படுகையில் எம்.ஜி.ஆர். எந்த சலனமும் இன்றி சாப்பிட்டார். இரவில் சிறை அறைக்குள் அடைத்து விட்டு காலையில்தான் திறந்துவிடுவார்கள். தாகம் தீர்த்துக்கொள்ள மண் பானையில் தண்ணீர். அருகே தகர டப்பா. அதில் இருந்து தண்ணீர் எடுத்துக் குடிக்க வேண்டும். அறையின் மூலையில் இரண்டு சட்டிகள். அதுதான் கழிப்பிட வசதி.

அப்போதே எம்.ஜி.ஆர். திரையுலகின் உச்ச நட்சத்திரம். வாய்ப்புகளும் வசதிகளும் வந்துவிட்டன. என்றாலும் சிறையில் இந்த அசவுகரியங்களை எம்.ஜி.ஆர். பொருட்படுத்தவில்லை. இதை எல்லாம் முகமலர்ச்சியுடன் எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொண்டார். அவருக்கு பஞ்சணையும் ஒன்றுதான், கட்டாந்தரையும் ஒன்றுதான்.

சிறைக்கு உள்ளேயும் எம்.ஜி.ஆரின் வள்ளல் தன்மை வெளிப்பட்டது. எம்.ஜி.ஆர். சிறையில் இருக்கிறார் என்றதும் சட்டத்துக்கு உட்பட்டு அவருக்காக பழங்கள், உணவுப் பொருட்களை வெளியில் இருந்து கட்சியினரும், ரசிகர்களும், பொதுமக்களும் அனுப்பி வைத்தனர். அவற்றை சிறைக் கைதிகளுக்கு பகிர்ந்து அளித்துவிட்டு எல்லோருக்கும் கிடைத்ததை உறுதி செய்த பிறகே எம்.ஜி.ஆர் சாப்பிடுவார்.

கைதானவர்களில் பலரை சாதாரணமான 'சி' வகுப்பில் அடைத்தனர். எம்.ஜி.ஆருக்கு மட்டும் 'பி' வகுப்பு அளிக்க சிறை நிர்வாகம் அனுமதி அளித்தது. ஆனால், எல்லோருக்கும் ஒரே வகுப்பு கிடைத்தால்தான் தானும் 'பி' வகுப்பில் இருக்க முடியும் என்று எம்.ஜி.ஆர். போர்க்கொடி தூக்கினார். அதன் பிறகே, அவருடன் கைதான பலர் 'பி' பிரிவுக்கு அனுப்பப்பட்டனர்.

சிறைவாசம் அனுபவித்தவர் மட்டுமல்ல; சிறையிலும் தன்னைச் சேர்ந்தவர்களுக்காக உரிமைக் குரல் எழுப்பியவர் எம்.ஜி.ஆர்.

திரையுலகில் வி.சாந்தாராமை தனது ஆசான்களுள் ஒருவராக எம்.ஜி.ஆர் கருதினார். இந்தியில் 'தோ ஆங்கே பாரா(ஹ்) ஹாத்' என்ற பெயரில் வி.சாந்தாராம் தயாரித்து இயக்கிய படம்தான் தமிழில் உதயம் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் எம்.ஜி.ஆர். நடித்த வெற்றிப் படமான 'பல்லாண்டு வாழ்க' ஆனது. சந்தர்ப்பவசத்தால் குற்றம் செய்துவிட்டு தண்டனை அடைந்த கைதிகளும் மனிதர்கள்தான் என்பதை விளக்கும் வகையில், கொடும் குற்றங்கள் செய்த கைதிகள் 6 பேரை மனம் திருந்தியவர்களாக மாற்றும் 'ஜெயிலர் ராஜன்' பாத்திரத்தில் அப்படத்தில் எம்.ஜி.ஆர். சிறப்பாக நடித்திருந்தார். **தொடரும்...**





முல்லைத்தீவு மத்திய கல்லூரியில் ஒரே வருடத்தில் 27 ஆசிரியர்களை இடமாற்றம் செய்தது, திட்டமிட்ட நடவடிக்கையென்றும், இதனை கண்டிப்பதாகவும் தெரிவித்தும் கடந்த வாரம் ஆர்ப்பாட்டமொன்று நடந்தது. இந்த இடமாற்றங்களால் அங்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டகாரர்கள் குற்றம்சுமத்தினார்கள்.





## யப்பா ஷப்பா கேத்தரின்

கேத்தரின் தெரசா தமிழில் சில படங்கள் நடித்துவிட்டார். இப்பொழுது கடம்பன் படத்தில் ஆர்யாவுடன் ஜோடி போட்டுள்ளாராம். அவருக்கு காட்டுவாசி வேடமாம். கத்தரின் நடிப்பில் மெட்ராஸ் படம்தான் பேசப்பட்டது. எனினும், கணிதன் படத்தை பார்த்துவிட்டுத்தான் நிறையக் ஹீரோக்கள் அவரை பாராட்டியுள்ளனராம். அதிலும், யப்பா ஷப்பா பாடல்தான் பலரையும் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது. அந்த பாடலில் அவரது மூவ்மென்ற்கள், உடலசைவுகள் பற்றி பலரும் பாராட்டியுள்ளனராம்.



## ராசியில்லாத ஓவியா!

ஓவியாவால் தமிழில் நிரந்தர இடம்பிடிக்க முடியவில்லை. கிடைத்ததெல்லாம் இன்னொரு நாயகி வேடம்தான். அந்தப்படங்களும் சொல்லிக்கொள்ளும்படி ஓடவில்லை. தனது ராசி தமிழுக்கு சரியில்லையென நினைத்த ஓவியா தெலுங்கு, கன்னடத்தல் பரீட்சித்து பார்த்தார். அதற்கு கைமேல் பலன் கிட்டியுள்ளது. இரண்டு மொழிகளிலும் தலா ஒவ்வொரு படம் ஒப்பந்தமாகியுள்ளார். தமிழில் வெளியான "மஞ்சப்பை" கன்னடத்தில் வெளியாகிறது. இதில் ஓவியாதான் நாயகி.

## ஆளே மரிய ஆர்யா!

ராஜாராணி படத்தின் பின்னர் ஆர்யா நடித்த எந்தப்படமும் சொல்லிக்கொள்ளும் விதமாக ஓடவில்லை. எந்தப்பக்கம் திரும்பினாலும் சறுக்கல்தான். சரிந்து வரும் மார்க்கெட்டை தூக்கி நிறுத்த சந்தானத்துடன் இணைந்து வாசுவும் சரவணனும் ஒன்னாப்படிச்சவங்க படத்தில் களமிறங்கினார். அதுவும் காலைவார, இப்பொழுது கடம்பன் படத்தைதான் நம்பியிருக்கிறார். காதல், நகைச்சுவை என ஜாலி நடிப்பிலிருந்தவர் முதன்முதலாக ரிஸ்க் எடுத்து நடிக்கிறாராம். உணவுக்கட்டுப்பாடு, ஜிம் என ஆர்யா ஆளே மாறவிட்டாராம்.





## பிஸி ஸ்ருதி

இந்திய நடிகைகளில் பிஸியான நடிகை ஸ்ருதி ஹாசன் போல்த்தான் உள்ளது. தமிழில், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளிலும் நான்கு படங்களை கைவசம் வைத்துள்ளார். போதாதற்கு இப்பொழுது இன்னொரு படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். எஸ்ஜே.சூர்யா இயக்கும் இந்தப்படத்தின் ஹீரோ கவன் கல்யாண். ஏற்கனவே "கப்பார்சிங்" என்ற வெற்றிப்படத்தை கொடுத்தபின் இருவரும் இணையும் படம். ஜூன் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாம்.



## கயலின் கெமிஸ்ட்ரி

"கயல்" ஆனந்திக்கும் ஜி.வி.பிரகாஷ்குமாருக்கும் அப்படியென்ன கெமிஸ்ட்ரியென தெரியவில்லை. இப்பொழுது மூன்றாவது படத்திலும் ஜோடி சேர்கிறார்கள். கடவுள் இருக்கான் குமாரு படத்தில் இப்பொழுது ஒப்புந்தமாகியுள்ளார். இதில் நிக்கி கல்ராணிதான் நாயகி. இன்னொரு நாயகியாக தெலுங்கி நடிகை அவிகா கோர் நடிக்கவிருந்தார். திடீரென அவரை நீக்கிவிட்டு ஆனந்தியை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

## டூரிங் டாக்கீஸ்

## இளைத்த ராகினி

ராகினி திரிவேதி தமிழிலும் இரண்டு படங்களில் நடித்துள்ளார். அம்மணி கன்னடத்தில்த்தான் கோலோச்சுகிறார். கன்னடப்படம் ஒன்றில் மேக்அப் இல்லாமல் நடிக்கிறாராம். தேயிலை கொழுந்து பறிக்கும் பெண் வேடமாம். வழக்கமாக கவர்ச்சி வெடிகுண்டாக பாவிக்கப்படும் ராகினி இந்தப்படத்திற்காக உடல் எடையையும் குறைத்துள்ளார். அத்துடன் வெயிலில் நின்று கறுத்தும் உள்ளாராம். இந்தப்படம் முடிய தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் வெளியாகும் படமொன்றில் நடிக்கவுள்ளாராம்.

## மலாய்க்கு போகும் கபாலி

தமிழ் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக கபாலி படம் மலாய்க்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு மலேசியாவில் திரையிடப்படவுள்ளது. படத்தின் பெரும்பாலான காட்சிகள் மலேசியாவில் எடுக்கப்பட்டது, மலாய் நடிகர்கள் நடித்தது போன்றவற்றால் அங்குள்ளவர்கள் ஆர்வமாக பார்ப்பார்கள் என நம்பி மொழிமாற்றியுள்ளனர். தமிழில் படம் வெளியாகும் அன்றே மலாயிலும் வெளியாகிறது. ரஜினிக்கு யப்பான் ரசிகர்கள் அதிகமிருப்பதால் யப்பான் மொழியிலும் மொழிமாற்றப்படவுள்ளது. கபாலியின் மலாய் டீசலை ஒரு இலட்சம்பேர் பார்த்துள்ளனராம்.

## திருப்தியான சிருஷ்டி

தமிழில் சில படங்களில் நடித்துவிட்டார் சிருஷ்டி டாங்கே. எனினும், முன்னணி நாயகியாக முடியவில்லை. தற்போது அச்சமின்றி படத்தில் நடிக்கிறார். குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதில் உள்ள சிரமங்களை பற்றிய படம் இது. சிருஷ்டிக்கு தமிழில் வாய்ப்புக்கள் இல்லை, மும்பைப்பக்கம் குடிபெயரப் போகிறார் என ஏற்கனவே செய்திகள் வந்திருந்தன. அச்சமின்றி பாடல் வெளியீட்டில் இதற்கு பதில் சொல்லியுள்ளார். தற்போது தமிழில் சில படங்களில் நடித்து வருகிறேன். நான் திருப்தியாக உள்ளேன் என்றுள்ளார்.

இந்த எண்ணம் என்னை அலைக்கழிக்கத் தொடங்கியது. பயம் மிகவும் அதிக மாகி இறுதியில் நான் வெளியே சென்று சாப்பிட்ட உணவையெல்லாம் வாந்தி எடுக்கும்படியாகிவிட்டது. பின் தொடர்ந்து வந்த அப்பா எனனைப் பிடித்து உலுக்கித் தரையில் தூக்கியெறிந்துவிட்டு " நீ என்ன இழவைச் சாப்பிட்டாய்?"எனக் கூச்சலிட் டார். அம்மா பின்னால் நின்றுகொண்டு "நான் எவ்வளவு தான் சாப்பிடக் கொடுத் தாலும் இவள் போதாதென்று மாம்பழங் களையும் வாழைப்பழங்களையும் திருட்டுத்த னமாகச் சாப்பிடுகிறாள். இவளால் நான் உங்களை விட்டுப் பிரிந்து போக நேரிடும்.. நீங்கள் அவளை வைக்குமிடத்தில் வைக்க வேண்டும்!" என்று முணுமுணுத்தார். அம்மா அப்பாவை எப்படி உருவேற்றி விடுகின்றார் என்பதைக் கண்டு கொண்டேன். அப்பாவின் கண்களில் பசு மாட்டிற்காகச் சண்டையிடும் காளையின் பார்வை மின்னியது.

என்ன நடக்கப்போகிறது என்பதைப் பார்க்காமலிருக்கக் கண்களை மூடினாலும் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை ஊகித்துக் கொண்டேன். சுவரின் மீது அவரென்னைத் தூக்கி வீசியபோது 'அப்பா உங்களால் வஞ்சிக்கப்பட்ட சித்தப்பாவின் கண்ணீர் என் மனதைத் தொட்டது' எனச் சொல்ல நினத்தேன். எல்லாம் முடிந்தபின்





# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

இருளில் அழுது கொண்டே சித்தப்பா சொன்னதை யோசித்துப் பார்த்தேன். எனது உண்மையான தாயார் இவரில்லை என்பது மெதுவாக எனக்குப் புலனாயிற்று. இப்போது சித்தப்பாவை முழுமையாக நம்பினேன்.

அடுத்தநாள் காலையில் அப்பாவின் பிள்ளை வளர்ப்புமுறை எவ்வளவு கடினமான தெனத் தெரிந்தது. என் உடல் முழுவதும் நோவும், வாயில் இரத்தப் பிசுபிசுப்பும், உடையெல்லாம் இரத்தக்கறையுமாயிருந்தது. ஆனாலும் நான் உடைகளை மாற்றவில்லை. அப்பா இதைப் பார்த்து என்மேல் இரக்கபடவேண்டுமென நினைத்தேன். குளிர்ந்த நீரில் என்னைக் கழுவிக்கொண்டு வீட்டைச் சுற்றி எனது துப்பரவு செய்யும் வேலையை ஆரம்பித்தேன். சூரியன் உதித்தது, அத்துடன் வெப்பமும் மெதுமெதுவாய் அதிகரிக்க எனக்குத் தலை சுற்றத் தொடங் கியது. விடாது நான் எனது வேலையைத் தொடர்ந்தேன். தொடர்ந்தும் சித்தப் பாவையும் அவருக்கு நடந்ததையும் நினைத்துக் கொண்டிருந்தேன். அதுவே எனக்கும் நடக்கலாமென்ற பயமும் என்னைத் தொடர்ந்தது. பசியான சிங்கத்தின் கால்களில் என் சித்தப்பா அகப்பட்டுக்கொண்டது போல எனது மூளைக்குள் படம் ஓடத்தொடங்கிப் பின் எல்லாமே கருமையானது.

எனக்கு உணர்வு வந்த போது நான் ஒரு மரத்தடியில் கிடந்தேன். யாரோ என்னை ஒரு துணியால் மூடியிருந்தார்கள். நான் எப்படி இங்கே வந்தேனென்று எனக்குத் தெரியவில்லை. அப்படியே சிறிது நேரம் கிடந்தேன். சில வேளை அப்பா என்னை வந்து பார்கலாம். சிறிது நேரத்தின் பின்பு துணியை உதறிவிட்டு எழுந்து கொண்டேன். எங்கு போகலாம்? தாகத்திற்கும் பசிக்கும் எங்கு உணவும் நீரும் கிடைக்கும்? எனது அப்பாவின் மனைவியிடம் சென்று மாட்டுக்கன்றுகளைப் பார்த்து வருவதாகச் சொன்னேன் அவர் ஒரு பதிலும் கூறவில்லை.

மாட்டுக்கன்றுகளைப் பார்ப்பதற்குப் பதிலாக வாழைத்தோட்டத்தை நோக்கி நடந்தேன். வாழைப்பழங்களைத் தேடி மரங்களிடையில் வந்த போது திடீரென உலர்ந்த சருகுகளின் மீது யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டது. அதே வேளையில் ஓரளவு பழுத்திருந்த வாழைக்குலை ஒன்றையும் கண்டேன். கவனமாகப் பழங்களைப் பறித்து உண்பதற்காகச் சத்தமின்றித் தரையில் உட்கார்ந்தேன். காலடிகள் இப்போது என்னை நெருங்கி வந்தன. எனது உடையில் தேவையானளவு பழங்களைப் பொதிந்து கொண்டேன். மெதுவாக எழுந்து போக நினைக்கையில் அப்பா இன்னும் மூவருடன் கதைத்தவாறே தோட்டத்தில் வந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்கள் என்னை நோக்கி நடந்து வந்தனர். நான் வளைந்து வளைந்து ஓடத்தொடங்கினேன். ஒருவாழைப் பழத்தைத் தன்னும் இழக்காது, அவர்களிடம் பிடிபடாமல் என்னால் தப்ப முடிந்தது. அன்றிரவு அப்பாவும் அவர் மனைவியும் இது பற்றி என்ன பேசிக்கொள்கின்றார்கள் எனக் கவனித்தேன். "சிலவேளை அது ஒரு நாயாக இருந்திருக்கலாம்" அம்மா சொன்னார்.

உனது கண்ணீரை நான் துடைக்கவில்லை என் அன்பான சித்தப்பாவே! நீஎங்கிருந்தாலும் என் நேசம் உன்னைத் தொடர்ந்து வரும் அது எனக்குத் தெரியும். எனது இதயத்தால் உன்னை என் கனவுகளில் காண்பேன். எனக்குத் தெரியும் நீயும் என்னை உன் இதயத்தில் சுமப்பாய். ஆனால் உன் ஆன்மா எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது.







அன்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு பிரதேசமான கிளிநொச்சியின் சிவபுரம் பகுதியின் அவலத்தை தீபம் ஊடககுழுமம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தது. அத்துடன் நின்றுவிடாமல், தீபம் மாபெரும் நிவாரணப்பணியொன்றையும் முன்னெடுத்தது. மக்களிற்கு தேவையான அரிசி, பருப்பு, சீனி, பிஸ்கட் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதி பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது.

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


வி.சுபாஸ்கரன்


மிதுனா


சோமசுந்தரம் வேணி


சிவர்சன் சுபாசினி

கோகுலன்

எக்ஸாம் என்ரரெயின்ற்மென்றிற்காக இந்தவாரமும் நான்கு கேள்விகளுடன் புறப்பட்டோம். என்ன கேள்வியென்றாலும் நான் ரெடி என நடிகர் வி.சுபாஸ்கரன் தயாரானார். பார்த்து பாஸ்... ஈஸியான கேள்வியாக கேளுங்க என நடிகை மிதுனா பரீட்சைக்கு தயாராக உட்கார்வதை போல உட்கார்ந்தார். எல்லாவிடயமும் அப் ரூ அப்டேற் நம்ம விரல்நுனி என்றபடி தயாரானார் வவுனியாவில் பணியாற்றும் சோமசுந்தரம் வேணி. செய்திகளை தவறாமல் படிப்பன். ஆனால் நீங்கள் கேட்பதை நினைவில் வைத்திருக்கிறோனோ தெரியவில்லை என ஆயத்தமானார் வவுனியாவை சேர்ந்த சிவர்சன் சுபாசினி.

**கேள்வி: மகிந்த ராஜபக்சவின் மனைவி பெயர் என்ன?**
பதில்: ஷிராந்தி ராஜபக்ச

***வி.சுபாஸ்கரன்:*** எங்களுக்கும் அரசியல் தெரியுமே... அது ஷிராந்தி ராஜபக்ச.

***மிதுனா:*** ம்... மிதுனாவிற்கும் மகிந்தவிற்கும் என்ன சம்பந்தம்? (சம்பந்தமேயில்லாமல் கதைக்க கமல் ரசிகையாக இருப்பாரோ)

***சோமசுந்தரம் வேணி:*** ஐயோ இப்பிடி ஈஸியான கேள்வியளா கேட்கப் பேரியள்... ஊருக்கே தெரிந்ததுதானே. ஷிராந்தி.

***சிவர்சன் சுபாசினி:*** யுயுபி.. இதெல்லாம் நமக்கு ஒரு கேள்வியா? ஷிராந்திதான் விடை.

**கேள்வி: தலையிலிருந்து முடி கொட்ட என்ன காரணம்? (இது கடிக்கேள்வி)**
பதில்: தலையில் முடியிருப்பது

***வி.சுபாஸ்கரன்:*** ஓஓ... அது வந்து ஓமோன் சுரப்பிகள் வீக்கமாக இருப்பதால் (நீங்கள் 'கடி'யில் வீக் பாஸ்)

***மிதுனா:*** இதுக்கு நிறைய யோசிக்கணுமே... (யோசிக்கிறார்) ஓ.. வயது போவதால்

***சோமசுந்தரம் வேணி:*** பேன் புளுப்பதால். குளோரின் வைத்து குளித்தால் சரியாகிவிடும்.

***சிவர்சன் சுபாசினி:*** கடிக்கே நாங்கள் கடிப்பம். தலையில் முடியிருக்குது. அதால கொட்டுது.

**கேள்வி: மகிந்த ராஜபக்சவிடமிருந்து பிரிவதற்கு முன்னர் அவருடனிருந்து மைத்திரி சாப்பிட்ட உணவு எது?**
பதில்: அப்பம்

***வி.சுபாஸ்கரன்:*** சத்தியமாக அது எனக்கு தெரிலையே... மைத்திரிக்குத்தான் அது தெரியும்.

***மிதுனா:*** அப்பமாக இருக்குமோ. இல்லையில்லை... ஆ.. கண்டுபிடிச்சிட்டன். அப்பம்தான். நாங்கள் அப்பவே அப்பிடி. விட்டிடுவமா?

***சோமசுந்தரம் வேணி:*** மைத்திரி பிரிந்த நேரம் பரபரப்பாக ஏராளம் செய்தி வந்து கொண்டிருந்தது. அது ஒரு பரபரப்பான காலம். இதுக்குள்ள என்ன சாப்பிட்டினம் என்பதை யார் நினைவில வைச்சிருப்பினம்.

***சிவர்சன் சுபாசினி:*** அவை என்ன சாப்பிட்டினம் என்பதை அவையிட்டத்தான் கேக்கவேணும்.

**கேள்வி: கடந்த வாரம் நாடு முழுவதும் ஏன் அடைமழை பொழிந்தது?**
விடை: இலங்கைக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மையம் உருவானது

***வி.சுபாஸ்கரன்:*** வர்ணபகாவானிடம்தான் கேட்கவேண்டும்.நாம் அந்தடிப்பாட்மென்றில் இல்லை.

***மிதுனா:*** ஐயையோ... இப்பிடியெல்லாம் கேட்டு கவிழ்க்கிறியளே... நான் எத்தனை கேள்வி பாஸ் பண்ணினன்? (கணக்குப் பார்க்கிறார்)

***சோமசுந்தரம் வேணி:*** இந்திரன் கடுப்பாகியிருப்பார். அதுதான் மழை.

***சிவர்சன் சுபாசினி:*** பெய்யென பெய்யும் மழை. நாங்கள் சொன்னனம். அது பெய்தது. அவ்வளவுதான். ஓகேயா.

---




# வவுனியாவில் ஆசிரியர்களின் அடாவடி

ஆசிரியர்கள் மாணவர்களால் கடவுளாக வணங்கும் காலம் மலையேறிவிட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆசிரியர்களும் ஒருவிதத்தில் பொறுப்புகூற வேண்டும். ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் தமது எல்லைகளை தாராளமாக கடக்கிறார்கள். கல்வி தனியார்மயப்பட்டு வர, ஆசிரியர்கள் பலர் பணத்தை இலக்காக கொள்ள இந்த விபரீதம் நிகழ்கிறது.

கல்வி கரன்ஸி நோட்டுக்களால் அளந்து கொடுக்கப்பட தொடங்கியதன் விபரீதம் தனியார் வீடுகளில் நடத்தப்படும் 'பேர்சனல் கிளாஸ்'கள். இந்தவகை கல்வியில் பெற்றோர் அதிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்என்பதைஅண்மைக்காலபத்திரிகை செய்திகள் உணர்த்துகின்றன. இப்படியான தனிப்பட்ட வகுப்புக்கள் மாணவிகளிற்குத் தான் வில்லனாகியுள்ளது. எனினும் இந்தப் பிரச்சினைகள் வெளிச்சத்துக்கு வருவதில்லை. பெண்பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு விடயம் காதும்காதும் வைத்ததை போல மூடிமறைக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் வவுனியா மாவட்டத்தில் கல்வி நிலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த வீழ்ச்சியில் ஆசிரியர்களிற்கு பங்கில்லையா?

பொதுவாகவே மாணவர்கள் மீது ஆசிரியர்கள் சுமத்தும் குற்றச்சாட்டு, அவர்கள் சொல் கேட்கிறார்கள் இல்லை. ஆசிரியர்களையே அதட்டுகிறார்கள் என்பது. மறுவளமாக மாணவர்களிடமும் குற்றச்சாட்டு உள்ளது. ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் என்பது பாரதூரமானவை.

வவுனியாவில் உயர்தர் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆசிரியர்களால் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அதாவது தமது விருப்புக்கு ஏற்ப பாடம்சொல்லிக்கொடுப்பது,பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் எந்த ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்களோ அவர்களிடம் தான் தனியார் வகுப்புகளில் மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது என அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதுதவிர, தனியார் வகுப்புகளில் மாணவிகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களில் சிலர் எல்லைமீறி செயற்படுவதாகவும் குற்றம்சாட்டுகிறார்கள்.

வவுனியாவில் படிப்பு சரியில்லை என்று விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு ஓடி வருகிறார்கள். வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் ஓடி வரும் மாணவ மாணவிகளிடம் இது சம்பந்தமாக கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் ஒன்றாக இருக்கிறது. அதாவது வவுனியாவில் படிப்பு முறை சரியில்லை. யாழ்ப்பாணத்தில் படிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லுகின்றனர். வவுனியாவில் ஒரு பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் இருவர் மாணவ மாணவிகளை தம்மிடம்தான் தனியார் வகுப்புகளிலும் கல்வி கற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தி வருகின்றனர். மாணவ மாணவிகள் இந்த இரு ஆசிரியர்களின் கட்டுப்பாட்டுக்கு வரவில்லை என்றால் அவர்களை பழிவாங்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகிறார்கள் என மாணவர் தரப்பு குமுறுகிறது.

வவுனியா மாவட்டம் முன் நோக்கி நகர வேண்டுமாயின் கல்வியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இதனை கல்வியாளர்கள் உணர மறுக்கின்றனர். ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்பிக்கும் திறமை இல்லை என்றால் மாணவர்கள் வேறு ஆசிரியரிடன்தான் கல்வி கற்கப் போவார்கள். மாணவர்கள் தாம் தெரிவு செய்யும் ஆசிரியர்களிடம் கல்வி கற்பதற்கான சுதந்திரத்தை எவரும் தடுக்க முடியாது. தம்மிடம்தான் கல்வி கற்கவேண்டும் என்று மாணவர்களை பணிய வைத்து பாடம் கற்பிக்க முயலும் ஆசிரியர்களாலும் தான் வவுனியா மாவட்டத்தில் கல்வி வீழ்ச்சியடைந்து வருகிறது.

ஊருக்கு ஒரு ஆசிரியர் இருந்த காலத்தில் கல்வி வளர்ச்சி கண்டிருந்தது. இப்பொழுது முழத்துக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார். ஆனால் கல்வி வீழ்ச்சியடைந்து செல்கிறது. யார் இதற்கு பொறுப்பு?



# குசும்புக்காரன் பக்கம்

தொண்டன் தலைவருக்கு விசுவாசமாக இருப்பதால்தான் தலைவருக்காக தனது உயிரையும் மாய்க்கத் துணிந்துவிடுகிறான். ஆனால் தொண்டனுக்காக தலைவர் என்ன செய்வார்? ஒன்றுமே செய்யமாட்டார். ஆனால் விதிவிலக்கான சம்பவமொன்று பதிவாகியுள்ளது. தொண்டனுக்காக தலைவர் ஒருவர் உயிரைத் தொடும் அளவுக்கு சேவை செய்த சம்பவமிது. ஆனால் என்ன, தலைவர் தொண்டனுக்காக செய்த இந்த உதவி வெளிச்சத்துக்கு வந்தால் தலைவருக்கு கெட்டபெயர் வரும் என்று தெரிந்தும் தலைவர் இந்தக் காரியத்தை செய்துள்ளார்.

கைதடியிலுள்ள வடக்கு இராசதானியின் மந்திரிதந்திரி ஒருவர்தான் தலைவன். தொண்டன் வவுனியாவாசி. தொண்டனின் குடும்ப பிரச்சனைதான் விவகாரம். தொண்டனுக்கும் மனைவிக்கும் அவ்வளவு நன்றாக உறவிருக்கவில்லை. அடிக்கடி சண்டையில் ஈடுபடுவார்கள். கணவனை விட்டு தூரமாக கொஞ்சகாலம் இருந்தால் எல்லாம் சரியாகுமென தெரிந்தவர்கள் சொன்ன ஆலோசனையை மனைவி ஏற்றார்.

தொண்டனின் மனைவி வவுனியாவில் ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். வெளி மாவட்டப் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதே கணவனை விட்டு தூரமாக இருக்க வழியென நினைத்து காரியத்தில் இறங்கினார். தான் பிறந்த ஊரான யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் கோரினார்.

விடயத்தை அறிந்த கணவனான தொண்டன் என்ன செய்யலாமென தலையை போட்டு உடைத்தபோதுதான் தலைவனிடம் செல்லலாமென்ற ஐடியா வந்தது. உடனே தலைவனிடம் ஓடிச் சென்றுள்ளார். தொண்டன் வந்துவிட்டானே என்றுதான் பார்த்தாரே தவிர, பிரச்சனையின் சரிபிழை பார்க்கவில்லை தலைவன். தேர்தலில் வெல்வதென்றால் இப்படியான தொண்டர்கள்தான் தேவையென்று நினைத்த தலைவன், கல்வி நிர்வாகத்திற்கு பொறுப்பானவரிடம் பேசி இடமாற்றத்தை இல்லாமலாக்கி விட்டார். தனதுதுறைக்கு தொடர்பில்லாத தலைவன் அவரென்பது தெரிந்தும், 'வேண்டப்பட்டவர்' என்பதன் அடிப்படையில் கல்வித்துறை அதிகாரி செயற்பட்டுள்ளார்.

இந்த இடத்தில்த்தான் தலையிருக்க வாலாடிய சம்பவம், வடக்கு கல்வித்துறை 'தலை'க்கு தெரிந்துள்ளது. அவர் உடனே தலையிட்டு அந்த பெண்மணியின் இடமாற்றத்தை மாற்றம் செய்துள்ளார். வவுனியாவிற்கு அண்மையிலுள்ள வன்னிப்பிரதேச பாடாலையொன்றிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

முதலில் இடமாற்றம் வழங்கிய கல்வித்துறை அதிகாரி, விழுந்தும் மீசையில் மண்படவில்லையென நடந்து கொண்டுள்ளார். தொண்டனின் மனைவியை அழைத்து, இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலையில் பணியாற்ற வேண்டும் என ஆலோசனை சொன்னதுடன் பகீர் ஆலொசனை ஒன்றும் சொல்லியுள்ளார். 'தொண்டனுடன் சும்மா சண்டை போடக்கூடாது. அவனுக்கு சமைத்து கொடுத்து எல்லோரும் சந்தோசமாக இருக்க வேண்டும்' என்றாரே பார்க்கலாம்!

என்னப்பா நடக்குதிங்கஞ் குடும்ப ஆலோசனை மையமா, கல்வித்துறையா என தலையில் கைவைத்துக் கொண்டிருக்கிறார் தொண்டனின் மனைவி.





இளைஞர்தின நிகழ்வு கடந்தவாரம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் ஆரம்பமாகி பொதுவிளையாட்டரங்கிற்கு பேரணியும் இடம்பெற்றது. இளைஞர், பெண்களிற்கு எதிரான வன்முறையை கண்டித்தும், வேலைவாய்ப்பை கோரியும் பதாகைகளையும் பேரணியில் ஏந்தியிருந்தனர்.




தீபத்தின் பரிசு மழை
சென்ற வார வெற்றியாளர்கள்

இம் முறை பரிசுமழையில் கேள்விக்கான சரியான பதில் வராத காரணத்தினால் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவில்லை. பரிசு மழையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்

கேள்வி
இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் முழுநீளத் தமிழ் திரைப்படம் எது?
பதில்
வாடைக்காற்று

தீபத்தின் இந்த மாபெரும் பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்...

தீபத்தின் பரிசு மழை

கேள்வி
தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநரின் பெயர் என்ன?

பதில் : ....................
பெயர் : ....................
முகவரி : ....................
தொ.பே : ....................

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.
வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

09 முடிவு திகதி : 02.06.2016

இல. 21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633



# பெண்ணெழுத்து 5

பி.சியா

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் இரு பாலையில் ஒரு சம்பவம் நடந்தது. இளம்பெண்ணொருவர் வீதியால் சென்று கொண்டிருந்தார். மின்னல்வேகத்தில் பறந்துவந்த மோட்டார்சைக்கிள் ஒன்று அவரை பந்தாடியது. அவர் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்.

இந்த சம்பவத்தில் என்ன விசேடம் உள்ளது?, இப்படித்தானே விபத்துக்கள் நடக்கின்றன என்று நீங்கள் யோசிக்கலாம்.

நன்றாக யோசித்து பார்த்தால் விபத்தென்றால் அதில் பெரும்பாலும் ஆண்கள்தான் மோதுபவர்களாக உள்ளனர். பாதிக்கப்படுவதில் பெரும்பாலானவர்கள் பெண்கள், சிறுவர்கள்தான். மனிதர்கள் உருவாக்கிய விதிப்படி சமூகத்தில் ஆண்கள் விரைவானவர்கள், உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள். பெண்கள் மெதுவாக, பவ்வியமாக செயற்படுபவர்கள். இதனால்த்தான் விபத்துக்களில் அதிகம் சிக்குபவர்களாக பெண்கள் உள்ளனர். அதற்காக பெண்கள் விபத்துக்களில் சிக்குவதில்லையென சொல்வதில் நியாயமேயில்லை. சிறிய வீதத்தில் பெண்கள் விபத்திற்கு காரணமாகிறார்கள்தான். ஆனால் அது உயிராபத்தான விபத்தாக மாறுவது அரிது.

ஏன் இந்த விபத்துக்கள் நடக்கின்றன? விபத்துக்கள் தனியே வீதியுடன் சம்பந்தப்பட்டவையா அல்லது அற்கும் அப்பால் சமூகக்காரணங்கள் உள்ளனவா?

வீதிவிபத்துக்கள் எல்லாக்காலத்திலும் உள்ளதுதான். வீதிக்கு இறங்குபவர்களிற்கு சில சிந்தனைகுழப்பம், அவதானமின்மை, கட்டுப்படுத்த முடியாமை போன்ற காரணங்களை சந்திக்க வேண்டியிருக்கும். அதனால் விபத்துக்கள் இப்பொழுதுதான்

> **ஜெயலட்சுமி விடாமுயற்சிக்காரி. கணவர் இல்லாவிட்டாலும் அவரது தொழிலை விடாமல் தொடர்ந்தார். நெருங்கிய உறவினர்கள், பிள்ளைகளின் ஒத்தாசையுடன் சிரமப்பட்டு அதனை முன்னகர்த்தி இன்று ஓரளவு சிறப்பான நிலையை அடைந்துள்ளார்.**

ஏற்படுகின்றன என்றில்லை. ஆனால் இப்பொழுது சடுதியாக அதிகரித்துள்ளன என்பதுதான் கவனிக்க வேண்டியது.

தற்போதைய சடுதியான அதிகரிப்பிற்கு காரணம் என்னவென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதிகரித்த வாகனங்கள். சாதாரணமாகசிறிய வீதிகளையே அடைத்துக் கொள்ளும் அளவிற்கு மோட்டார் வாகனங்கள் போகின்றன.

இன்று மோட்டார்வாகனம் இல்லாத குடும்பங்கள் அரிது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா,திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு நகரங்களில் மிகச்சிறிய எண்ணிக்கையானவர்களிடமே மோட்டார் வாகனங்கள் இல்லாமலிருக்கும். இந்த பிரதானநகரங்களை விட உபநகரங்கள், கிராமங்கள் அனைத்திலும் இதுதான் நிலை.

குறிப்பாக இளவயதுக்காரர்கள் எல்லோரிடமும் மோட்டார் வாகனங்கள் உள்ளன. அடையாள அட்டையை போல மோட்டார் வாகனமொன்றை அத்தியாவசிய தேவையாக கருதும் இளைஞர்கள்தான் அனேகர். ஒரு வேலை வேண்டும் என அக்கறைப்படும் தலைமுறை அருகிக் கொண்டு செல்கிறது.

இதற்கு முக்கிய காரணம், தங்கி வாழும் சமூகமாக நமது இளையவர்கள் உருவாகுவதுதான். சுயமான உழைப்பில்லாத இளவயது ஆண்,பெண்கள் மிகவிலை கூடிய கனவுகளும் நம்மத்தியில் வாழ்கிறார்கள். பேசியல், விலையுயர்ந்த அணிகலன்கள், ஒரு ஸ்கூட்டி என பெண்களின் உலகம் அமைந்தால், எப்.சற், பல்சர், அப்பாச்சி என புது தயாரிப்பு மோட்டார்சைக்கிள்களால் ஆண்களின் உலகம் அமைகிறது. மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பதே வாழ்வின் பெரும்பேறாக கருதும் வாலிபர்கள் நிறைந்துவரும் உலகமிது.

ஒரு பிரதானவீதியில், ஒரு சந்தியில் ஒரு மாலைப்பொழுதில் குறிப்பிட்ட சிறிதுநேரம் நின்று கவனித்து பாருங்கள். தெருநாய்களை போல எந்த இலக்குமில்லாமல் ஒரேயிடத்தை சுற்றிச்சுற்றிவரும் இளைஞர்கள் எத்தனை பேரென. உங்கள் அயலில் இருப்பவர்களில் எத்தனை இளைஞர்கள் வேலையில்லாமல் ஊரைச்சுற்றி திரிகிறார்கள் என.

இது எப்படி சாத்தியமாகும்? நமது நிலத்தின் பெரும் கொடையே ஒருவர் எந்த உத்தியோகமும் பார்க்காமல் வாழலாம் என்பதுதான். அது தாய்மண்ணிற்கே உரிய சிறப்பு. எந்த பிரயாசையுமின்றி வீட்டு காணியில் விளைவதை வைத்தே வாழலாம் என்பது நமது நிலம் தந்த கொடை. இப்படியான நிலையில், பெரும் பண உதவிகள் செய்ய சொந்தங்கள் வெளிநாட்டில் இருந்தால் எப்படியிருக்கும்?

நமது சமூகத்தில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியது புலப்பெயர்வு. எட்டுத்திக்கும் சென்று அறிவை பெற்றுத்திரும்ப வேண்டிய சமயத்தில் நம்மவர்களில் சிறிய பகுதியினர் மட்டுமே புலம்பெயர்ந்த நிலத்தில் அதை செய்திருக்கிறார்கள். குறிப்பாக புலம் பெயர்ந்த தேசங்களில் பிறந்த இரண்டாம் தலைமுறைதான் அதை செய்துள்ளது. மற்றர்கள் பணமீட்டி, அதிலொரு பகுதியை ஊரிலுள்ள தம்பிக்கு, மச்சானிற்கு மோட்டார்சைக்கிள் வாங்கிக்கொடுக்கத்தான் விரும்புகிறார்கள். அதனால்த்தான் வடக்கு பெருநகரங்களில் மோட்டார்சைக்கிள் சந்தை பெரிமெடுப்பில் வளர்ந்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியாவில் புதிய தயாரிப்பு மோட்டார்சைக்கிள்கள் வரும் வேகத்திலேயே காலியாகிவிடுகின்றன. ஒவ்வொன்றும் மூன்று, நான்கு இலட்சம் பெறுமதியானவை. பதினெட்டு, இருபது வயது வாலிபனிற்கு இந்த பெறுமதியான மோட்டார்சைக்கிள் அத்தியாவசியமானதா?

செய்வதற்கு வேலையில்லை, ஓடித்திரிய மோட்டார்சைக்கிள், எரிபொருளிற்கு காசு தரும் உறவுகள், பின்னாலிருக்க நண்பர்கள், மதுச்சாலைகள்ஞ் அடுத்தது என்ன நடக்கும்?

நமது சமூகத்தின் எதிர்காலம் என்னவாக மாறும்?

இப்படி ஒரு தொகை இளைஞர்கள் இருக்க, நாளாந்த வாழ்விற்காக அல்லாடுபவர்களும் இருக்கிறார்கள்தான். அண்மையில் யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கு சென்றஅரசியல் இயக்கமொன்றின் பிரதிநிதி யொருவர் மனத்துயருடன் சில கதைகள் சொன்னார்.

வறுமையுடன் போராடும் குடும்பங்களை சேர்ந்த மாணவிகள் பல்கலைகழக படிப்பை தொடர எதிர்கொள்ளும் சிரமங்கள் அவை. அரை இறாத்தல் பாணை மூவர் பங்கிட்டு ஒருவேளையை சமாளித்துக் கொள்கிறார்கள். நான்காயிரம் ரூபாயில் மாதத்தை ஓட்டும் மாணவிகளும் உள்ளனர். ஆனால் நாளொன்றிற்கு ஆயிரம் ரூபாயை நண்பர்கள், நண்பிகளுடன் செலவிடுபவர்களும் அந்த பல்கலைகழகத்தில்தான் இருக்கிறார்கள். சமூகம், சக மனிதர்கள் பற்றி சிந்திக்கும் இயல்பை நமது சமூகம் இழந்துவிட்டதா? வெளிநாட்டு பணம் சமூக அமைப்பையே மாற்றிவிட்டது. வெளிநாட்டில் உறவுகள் இருப்பவர்கள் தம்மை வேறு கிரமகவாசிகள், இங்குள்ள பிரச்சனைகள் எதிலும் தாம் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல, ஏதோ மற்றவர்கள் அதை பார்த்துகொள்ளுங்கள் என்ற மனநிலையில் இருப்பதை அவதானித்திருக்கிறேன். அதனால்த்தான் அலங்காரபொம்மைகளாக ஒரு பகுதியினர் இருக்க, அன்றாட வாழ்விற்கு போராடுபவர்களாக மற்றவர்கள் உள்ளனர். அண்மையில் ஜெயலட்சுமி என்ற பெண்ணை சந்திக்க கிடைத்தது. யாழ் நகருக்கு சமீபமாக வாழும் அந்த பெண்மணி கணவனை இழந்தவர். சிவனேயென வீதியில் சென்று கொண்டிருந்தவரை விபத்தென்ற பெயரில் இழந்தவர்.

“எங்கட கலியாணம் பேசித்தான் நடந்தது. ஆனால் அவர் சீதனம்ஒன்றும்வாங்கயில்லை. ஆனால் என்னை நன்றாக கவனித்தார். நல்ல பிரயாசைக்காரர். நல்லெண்ணை உற்பத்திசெய்து கடைகளுக்கு கொடுத்தார். எங்களுக்கு மூன்று பிள்ளைகள்.

தொழில் நன்றாக போய்க்கொண்டிருந்தது. தொழிலை விருத்தி செய்து, பெரிய கொம்பனியாக்க வேண்டுமென்றது அவரது ஆசை. ஆனால் அவர் விபத்தொன்றில் சிக்கிவிட்டார். ஆபத்தான கட்டத்தில் இருந்து கோமாவிற்கு வந்துவிட்டார்.

கொழும்பில் 15 நாள் சிகிச்சை. கோமா தெளிய யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார்கள். இங்கு வந்து மறுநாள் மரணமாகிவிட்டார். இவர் இல்லாதது இரண்டு கைகளும் இழந்ததை போலிருந்தது” என கண்கலங்கினார்.விபத்துக்களில் அதிகம் பாதிக்கப்படுவது இப்படியான அப்பாவிகள் தான். பொறுப்பில்லாத யாரோ ஒருவரால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களில் அவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

ஜெயலட்சுமி விடாமுயற்சிக்காரி. கணவர் இல்லாவிட்டாலும் அவரது தொழிலை விடாமல் தொடர்ந்தார். கணவரின் 31 முடிவதற்கு முன்னரே தொழிலில் இறங்கினார். கணவர் இருந்தபோது வீடு கட்டிய கடனும் இருந்தது. ஆட்களை வைத்து தொழில் செய்ய வசதியில்லாத நிலையில் நெருங்கிய உறவினர்கள், பிள்ளைகளின் ஒத்தாசையுடன் சிரமப்பட்டு அதனை முன்னகர்த்தி இன்று ஓரளவு சிறப்பான நிலையை அடைந்துள்ளார்.

விபத்தில் சிக்குவதற்கு சிலநாட்கள் முன்னர் தான் ஜெயலட்சுமியை அழைத்துக் கொண்டு சென்றுநல்லெண்ணெய்கொடுக்கும்கடைகள் எல்லாவற்றையும் கணவன் அறிமுகப்படுத்தினாராம். கணவர் இறந்த சமயத்தில் சிறுகுழந்தையான கடைசிப் பிள்ளை உள்ளிட்ட மூன்று குழந்தைகளும் பட்டினியால் வாடியதாகவும் கடந்த காலத்தை கண்ணீருடன் நினைவுகூர்ந்தார்.

இந்த சமயத்தில்த்தான் வடமாகாண பெண்கள் அமைப்பின் தலைவி ஈஸ்வரியின் அறிமுகம்ஜெயலட்சுமிக்குகிடைத்தது.லோன் மற்றும் தொழில் விருத்தி உதவிகள் அவர் மூலம் கிடைக்க, இப்பொழுது வேலைக்கு ஆட்களை வைத்து செய்யுமளவிற்கு தொழிலை விஸ்தரித்துவிட்டார்.

யாழ் மாநாகரசபை அண்மையில் நடத்திய கண்காட்சியொன்றில் ஜெயலட்சுமியால் உருவாக்கப்பட்ட கரட் கேக் முதலிடம் பெற்றுள்ளது. சிறுவர்கள் அதை விரும்புவார்கள் என்கிறார்.

நல்லெண்ணை வியாபாரத்தில் ஜெயலட்மி சந்தித்த சவால்கள் அனேகம். ஆண்களின் தொழிலான அதில் பெண்கள் நுழைவது சவாலானது. நல்லெண்ணை வாங்கிய கடைக்காரர்கள் பலர் ஜெயலட்சுமியை ஏமாற்ற முயன்றுள்ளனர். எனினும் இதையெல்லாம் கடந்துதான் அவர் இன்று நிமிர்ந்து நிற்கிறார்.

ஒரு விபத்து என்பது பத்திரிகை படிப்பவர்களிற்கு வெறும் செய்தி. பார்ப்பவர்களிற்கு வெறும் சம்பவம். விபத்தை ஏற்படுத்தியவனிற்கு சில கால பிரச்சனை. ஆனால் விபத்தில் சிக்கியவனிற்கு? அவனது குடும்பத்திற்கு?



(கடந்த நான்கு மாதத்தில்)
யாழ்ப்பாண சிரேஸ்ட பொலிஸ்அத்தியட்சகர் எல்லைக்குட்பட்ட ஒன்பது பொலிஸ் பகுதிகளிலும்
உயிரிழப்பு 13
பெரிய காயங்கள் 35
சிறு காயங்கள் 51
பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து குற்றம் 16,088

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com





# அழகின் இரகசியம் 21

பழ வகைகளை முகத்தில் பூசி கழுவலாம். ஆனால் எல்லாப் பழங்களையும் உபயோகப்படுத்த முடியாது.

மஞ்சள் வாழைப்பழம் உலர் சருமத்திற்கு நல்லது. வாழைப்பழத்தை மசித்து அதனுடன் சிறிது பால் அல்லது பௌடருடன் கலந்து முகத்தில் தேய்த்து ஸ்க்ரப் செய்யலாம்.

அப்பிளை வேக வைத்து தோலை நீக்கி உள்ளிருக்கும் கூழை முகத்தில் தடவலாம். இதனால் முகம் பளபளவென்றிருக்கும்.

எண்ணெய் பசை சருமத்திற்கு அன்னாசி பழ சாற்றுடன் பால் அல்லது பால் பௌடர் கலந்து முகத்தில் போடவும். 5 முதல் 10 நிமிடங்கள் வரை ஊற வைத்து பின் முகம் கழுவினால் பளிச்சென்றிருக்கும்.

பேரிச்சம் பழத்தை பால் அல்லது சுடு தண்ணீரில் ஊற வைக்டகவும். அதை விழுதாக்கி அத்துடன் ஒரு டிஸ்பூன் தேன் கலந்து! தேய்க்கவும். (முடி இருக்கும் இடத்தை தவிர்து விடவும்.) 15 இலிருந்து 20 நிமிடங்கள் வரை ஊற வைத்துக் கழுவவும். இது சிறந்த பளிச்சாக செயல்படுகின்றது.

பட்டர் ப்ருட் எனப்படும் அவகோடா பழத்தினுள் இருக்கும் கூழை முகத்தில் தடவினால் முகம் பிரகாசமாக இருக்கும்.

பப்பாளி நல்ல நிறத்தை கொடுக்க கூடியது. ஆனால் உடலில் உஷ்ணம் அதிகமாக இருப்பவர்கள் அடிக்கடி இதை உபயோகிப்பதை தவிர்க்கவும்.

சரியான வேளையில் சரியான முறையில் சாப்பிடுங்கள். நீங்கள் சாப்பிடும் உணவில் 25மூ அரிசி வகை இருக்க வேண்டும். மீதமுள்ள 75மூ இல் புரொட்டீன் கல்சியம் விட்டமின் மற்றும் இதர சத்துக்கள் இருக்க வேண்டும். இவை அனைத்தும் காய்கறி பழங்கள் கீரை வகைகளில் கிடைக்கின்றன.

நார்ச்சத்துள்ள உணவு வகைகளை அதிகமாக சேர்த்துக் கொள்ளுங்கள். கிழங்கு வகைகள் எண்ணெயில் பொரலித்த பண்ணடங்கள் கொழுப்பு இனிப்பு நிறைந்த பதார்த்தங்கள் அடிக்கடி சாப்பிடுவதைத் தவிருங்கள். பிறகென்ன எப்பொழுதுமே நீங்கள் அழகு ராணிகளாகவும் அழகு ராஜாக்களுமானத் திகழ்வீர்கள்.

முட்டையில் உயர் வகை புரொட்டீனும் விட்டமிஜன் தாதுக்களும் நிறைந்திருக்கிறது. அசைவம் சாப்பிடாதவர்கள் அநேகம் பேர் முட்டை சாப்பிடுகின்றார்கள். காரணம் அதிலிருக்கும் சத்து தான்.

முட்டையின் வெண்கரு சருமத்தை இறுகச் செய்யும். அதனாலேயே முகத்திற்கு போடும் பக் குகளில் வெண்கரு பௌடர் கலக்கிறார்கள்.

தலைமுடியைப் பளபளப்பாக வைத்துக் கொள்ள அவ்வப்போது முட்டை வோஷ் செய்வது நல்லது. முட்டையை நன்கு அடித்துக் கொண்டு நல்லெண்ணெய் உப்பு சேர்த்து தலைமுடிக்குனு மசாஜ் கொடுக்கவும். பத்து நிமிடங்கள் இதை ஊற வைத்து ஷம்பூ கொண்டு அலசவும். இதனால் தலை முடியின் வேர்க் கால்கள் பலமானதாவும் தலைமுடி பளபளப்பாகவும் இருக்கும்.

தலைமுடிக்குனு மருதாணியை அப்படியே போடுவது வறண்ட தன்மையைக் கொடுக்கும். இதனுடன் முட்டையைச் சேர்த்து தலையில் தடவிக் குளிக்கலாம்.

முட்டை மணம் பிடிக்காதவர்கள் முட்டையிலிருந்து தயாரிக்கக் கூடிய லெஸிதின் பௌடரில் 2 டிஸ்பூன் எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து தலையில் தேய்த்துக் குளிக்கலாம். இது ஒரு நல்ல கண்டிஷனராகவும் இருக்கும். சிறிது முடி இருப்பவர்களுக்க நிறைய முடி இருப்பது மாதிரியான தோற்றமும் கொடுக்கம்.

இளநீர் பருகுவது அதிலும் குறிப்பாக வெயில் காலத்தில் அடிக்கடி பரகுவது நல்லது. வேயிலினால் ஏற்படும் பாதிப்பைப் போக்க இரண்டு டிஸ்பூன் இளநீருடன் சிறிது தேன் கலந்து முகம் கழுத்து கைகளில் தடவி கழுவினால் கருமை நீங்கும்.

உள்ளி சிறந்த கிருமிநாசினி என்றாலும் நேரடியாக அரைத்து சருமத்திற்கு போடக் கூடாது. போட்டால் சருமம் கறுத்து விடும். உள்ளியை அரைத்து பால் வெண்ணெய் நெய் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் கலந்து பூசினால் பரு போகும். இஞ்சியில் உள்ள அன்டி பக்டீரியா தன்மை சருமத்தில் உள்ள கிருமிகளை அழித்து பருக்கள் தழும்புகள் போன்றவற்றை மறையச் செய்யவும். அத்தகைய இஞ்சியை சாறு எடுத்து அத்துடன் ரோஸ் வோட்டர் கலந்து முகத்தில் தடவி சிறிது ஊற வைத்து கழுவ முகத்தில் உள்ள பருக்கள் சீக்கரம்போய்வீடும்.

---



# கருவின் மீது மருந்துகளின் தாக்கம்

கருவுற்ற தாய்க்கும், கருவுக்கும் சில நேரங்களில் மருந்துகள் மிகவும் முக்கியமான தேவையாக இருக்கும் அப்படிப் பட்டவர்கள் மருந்தானாலும், சத்துணவு மாற்றானாலும், மருந்துவரின் ஆலோசனை யின்றி எதையும் உட்கொள்ளக் கூடாது. தேவையெனின், விற்றமின் மற்றும் தாதுக்கள் அடங்கிய மாத்திரைகளை உட்கொள்ள மருத்துவர்களே சிலருக்குப் பரிந்துரைப்பர்.

கருவுற்ற தாய் உட்கொள்ளும் மாத்திரைகள், கருவின் வளர்ச்சிக்குப் பிராணவாயுவும் பிற சத்துக்களும் செல்லக்கூடிய நஞ்சுக்கொடி வழியாகவே செல்லும். எனவே, கருவுற்ற தாய் உட்கொள்ளும் மருந்துகள், மாத்திரைகள் கருவை பலவிதங்களில் பாதிக்கும்:

இவைகள் கருவை நேரடியாக பாதித்து கருவின் வளர்ச்சியில் அசாதாரண மாற்றத்தை (பிறவிக் குறைபாடுகள்) ஏற்படுத்தலாம்; சில சமயங்களில் கரு இறக்கவும் நேரிடலாம்.

இவைகள் சில சமயங்களில் நஞ்சுக் கொடி சுருங்கி, கருவுக்குச் செல்ல வேண்டிய பிராண வாயு மற்றும் பிற சத்துக்கள் செல்லாமலோ, மிகக் குறைந்த அளவோ கிடைக்க செய்ய லாம். இதன் விளைவாக குழந்தை வளர்ச்சி குறைந்தோ, எடை குறைந்தோ பிறக்கலாம்.

இவைகளால் கருப்பையின் தசைநார்கள் அழுத்தமாக சுருங்கி, விரிய நேரிடலாம். இது கருவுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதோடு, உரிய காலத்திற்கு முன்பே பிரசவ வலியை ஏற்படுத்தி, குறைப்பிரசவத்தை ஏற்படுத்தக் கூடும்.

கருவுற்ற தாயின் இரத்தத்தை குடல் உறிஞ் சியின் அருகிலுள்ள நஞ்சுக் கொடியின் மிக மெல்லிய தசைப்படலமே சிசுவின் இரத்தத்தில் இருந்து தாயின் ரத்தத்தை பிரிக்கிறது. கருவுற்ற தாய் உட்கொள்ளும் மருந்துகள் குடல் உறிஞ்சியின் உள்ள இரத்தக் குழாயகள் மூலம் மெல்லிய திரையைக் கடந்து தொப்புள் கொடி வழியாக கருவைச் சென்றடையும்.

கருவின் வளர்ச்சிக் காலம் மற்றும் தாய் உட்கொள்ளும் அளவு மருந்து களின் இரண்டும் கருவின் மீது மருந்துகள் ஏற்படுத்தும் தாக்கத்தைத் தீர்மானிக்கின்ற காரணிகளாகின்றன. கரு உருவாகி 20 நாட் களுக்குள் தாய் உட்கொள்ளும் சில மருந்துகள் கருவையே அழித்துவிடநேரிடலாம் அல்லது எந்தவொரு பலனும் கூட இல்லாமல் இருக்கலாம். கருவின் உறுப்புகள் வளரும் கருவுற்று 3 முதல் 8 வார காலத்தில், மருந்துகளால் கரு எளிதில் பாதிப்படையக் கூடியது. இக்காலகட்டத்தில் உட்செல்லும் மருந்துகளால் எந்த பாதிப்பும் ஏற்படுத் தாமலிருக்கலாம் அல்லது கருக்கலைய நேரிடலாம். சில சமயங்களில், பிற்காலத்தில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய குறைபாடுகளை ஏற்படுத்தலாம்.

கருவுற்று எட்டு வாரங்களுக்குப் பிறகு உட்கொள்ளும் மருந்துகளால் வளர்ச்சியுற்ற சிசுவின் உடலுறுப்புகளின் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளில் ஏதேனும் சில பாதிப்பை ஏற்படுத்தலாம்.

உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்துறை, கருவுற்ற காலத்தில் உட்கொள்ளும் சில மருந்துகள் கருவின் மீது ஏற்படுத்தும் பாதிப்பின் அளவைக் கொண்டு மருந்துகளை வகைப்படுத்தியுள்ளது. அதிக விஷத்தன்மை கொண்ட சில மருந்துகளால் பிறப்பு குறைபாடுகள் நிகழ வய்ப்புள்ளதனால் , கருவுற்ற பெண்கள் இத்தகைய மருந்துகளை உட்கொள்ளவே கூடாது எனத் தடை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, தலிடோமைட் (வணிகப் பெயர் தாலோமிட்) என்னும் மருந்து, பல ஆண்டுகளுக்கு முன்பு இம்மருந்தால் சிசுவின் கை, கால் வளர்ச்சியை வெகுவாகக் குறைப்பதோடு, குடல், இருதயம், இரத்த நாளங்கள் ஆகியவற்றையும் பாதிப்படைய செய்தது. சில மருந்துகள் விலங்குகளில் பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்திய போதும் மனிதர்களில் ஏதும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. உதாரணமாக ஆன்டிபெர்ட் என்று சொல்லக்கூடிய மிக்லீஸின். இம்மருந்து வாந்தி, அஜீரணக் கோளாறுகளுக்காக உட்கொள்ளப்படுகிறது.

# உங்கள் கண்கள் எப்படி

கண்களில் பலவகை உண்டு. மீன் போன்ற கண்கள், முட்டைக் கண்கள் , நீளமான கண்கள், சிறிய கண்கள். ஒவ்வொரு வகையான கண்களுக்கும் குணாதிசயங்கள் வேறுபடும். அப்படி ஆராய்ச்சியாளர்கள் பிரவுன் நிற கண்களை உடையவர்களிடம் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

உங்களில் நட்பு வட்டத்தில் அத்தகைய கண்களை பெற்றிருப்பவரகள் இருந்தால் அவர்களைப் பற்றி தெரியாத விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.அல்லது நீங்கள் ப்ரவுன் நிற கண்களைக் கொண்டவரா? உங்களைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் சொல்வது சரியா என எடைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எளிதில் யாரையும் நம்பி விடுவீர்கள். எல்லாரிடமும் எளிதாக பேசிவிடுவீர்கள். உங்களிடம் ரகசியங்கள் தங்காது. உங்களைப் பற்றி எவ்வளவு பெரிய ரகசியத்தையும் நீங்கள் நம்பும் எல்லாரிடமும் சொல்லிவிடுவீர்கள். உங்களுக்கு நிறைய நண்பர்கள் இருப்பார்கள். உங்கள் நட்பு வட்டம் பெரியதாக இருக்கும். நீங்கள் நட்பிற்கு முதல் மரியாதை அளிப்பவர். பிரவுன் நிற கண்களைக் கொண்டவர்கள் எப்போதும் தங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்பர்கள். எங்கும், என்றும், எனர்ஜியுடனே காணப்படுவார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அவர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் கூட வாழ்க்கையை எப்படி மகிழ்ச்சியுடன் நடத்துவது என்றே யோசிப்பார்களாம். உளவியலாளர்களும் இதையே வழிமொழிகிறார்கள். வாழ்க்கையை எப்படி சந்தோசமாக கொண்டு செல்வது என இவர்களை கேட்டு அறிந்து கொள்ளலாம். பரவுன் நிறக் கண்கள் கொண்டவர்கள் உணர்ச்சிகரமானவர்கள. இளகிய மனம் கொண்டவர்கள். சின்ன சிம்பதிக்கும் அழுதுவிடுவார்களாம்.

அடுத்தவர்களின் சின்ன சின்ன கஷ்டங்களைக் கூட தாங்க முடியாமல் கண்ணீர் விடுவார்களாம். அதே போல் அடுத்தவர்களின் மன நிலையை புரிந்து கொள்வதில் அவர்களை யாரும் அசைக்க முடியாது. அதனால்தான் எல்லோரும் பழுப்புக் கண்களைக் கொண்டவர்களிடம் நம்பிக்கையாய் மனம்விட்டுபேசுவார்களாம்.பிரவுன் நிற கண்கள் கொண்ட பெண்கள், அவர்கள் நேசிப்பவர்களுக்காக எதையும் செய்வார்களாம். அவர்கள் மீது அளவு கடந்த காதலை வைத்திருப்பார்கள். தங்கள் காதலனை எப்போதும் கொண்டாடுவார்களாம். அதனால் ஆண்களே உங்கள் கேர்ள் ஃபிரண்டிற்கு பிரவுன் நிறக் கண்கள் இருந்தால் நீங்கள் சட்டையை கொலரை தூக்கிவிட்டுக் கொள்ளலாம். மொத்தத்தில் பழுப்பு நிற கண்கள் கொண்டவர்கள் வாழ்க்கையை நேசிப்பவர்கள்,அன்பானவர்கள், நம்பிக்கையானவர்கள் என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.





# வீட்டில் கேக் செய்வது எப்படி?

நம்வீட்டில்செய்யமுடியாதபொருட்களுள் ஒன்றாகக் கருதப்படுவது கேக்.

ஏனெனில் கேட் செய்ய பேக்கிங் அவின் தேவை. ஆனால் கேக்கை நாம் வீட்டில் உள்ள பிரஷர் குக்கரிலேயே பேக் செய்யலாம் என்பது எத்தனை பேருக்கு தெரியும்...? கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாகவே பிரஷர் குக்கரில் கேக் செய்யும் முறை நடைமுறையில் உள்ளதுதான்.

**கேக் செய்யத் தேவையான பொருட்கள்**

மைதா 1 1/2 கப், சூரியகாந்தி எண்ணெய் 1/2 கப், ஆப்ப சோடா 1/2 ஸ்பூன், பேகிங் பவுடர் 1/2 ஸ்பூன், வெண்ணிலா எசன்ஸ் 1 ஸ்பூன், பால் 1 கப், பொடித்த சக்கரை 1 கப், சமையல் கலர் 1 சிட்டிகை (விருப்பபட்டால்)

**செய்முறை**

ஒரு அகலமான பத்திரத்தில் மைதா, ஆப்ப சோடா, பேகிங் பவுடர், பொடித்த சக்கரை அனைத்தையும் கலந்து, மா சல்லடை மூலம் சலித்து கொள்ளவும்.

பிறகு அதில் எண்ணெய், வெண்ணிலா எசென்ஸ், கலர் சேர்த்துக் கொள்ளவும். பின் பாலை அதனுடன் சேர்த்து கட்டியில்லாமல் இட்லி மா பதத்திற்கு கிளறவும். மாவு கட்டியாக இருந்தால் சிறிது பால் சேர்த்து கொள்ளலாம். குக்கரில் ஆற்று மணலை பாதி அளவு நிரப்பி அடுப்பில் வைக்கவும். (கண்டிப்பாக வீடு கட்டுவதற்கு உபயோகப் படுத்தும் சலித்த ஆற்று மணல் தான் தேவை.)

ஒரு கணமான அலுமினிய பாத்திரத்தில், ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி பாத்திரத்தில் எல்லா இடத்திலும் பரவுமாறு தடவவும்.

கேக் ஒட்டாமல் வருவதற்காக, அதன் மேல் சிறிதளவு மைதா மா தூவவும். ஏற்கனவே கலந்து வைத்த கேக் கலவையை அந்த பாத்திரத்தில் ஊற்றவும். எப்பொழுதும் கேக் பாத்திரத்தின் பாதி அளவுக்கு தான் மா ஊற்ற வேண்டும், அப்போது தான் கேக் எழும்பி வரும். கேக் பாத்திரத்தை குக்கரில், மணல் மீது வைத்து மூடவும்.

குக்கரில் விசில் போட கூடாது. குக்கர் மூடியில் உள்ள கேஸ்கட் வளையத்தைப் போட வேண்டாம். 30 நிமிடம் கழித்து குக்கரை அனைத்து விடவும். கீழே இறக்கி வைத்து 10 நிமிடம் கழித்து கேக்கை எடுத்து பரிமாறவும்.

**குறிப்பு:**

கேக்கின் அளவை பொறுத்து கேக் வேகும் நேரம் சற்று மாறுபடலாம். எனவே 25 நிமிடம் கழித்தவுடன், குக்கரை திறந்து இட்லி வெந்து இருக்க என்று பார்ப்பது போல் ஒரு கத்தியால் குத்தி பார்க்கவும். மா ஒட்டாமல் வந்தால் கேக் வெந்து விட்டது என்று அர்த்தம். இல்லா விடில் இன்னும் சிறிது நேரம் வேக வைக்கவும்.

குக்கரில் கேக் கலவைப் பாத்திரத்தை வைக்குமுன், மணலைச் சூடு செய்ய வேண்டாம்.

# நீங்களும் வெள்ளிக் கொலுசு நாயகியா?

நகைகள் என்பது தமிழர் பாரம்பரியத்தில் மிக முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. நகைகள் அணிவதன் மூலம் நம் உடலில் உள்ள முக்கிய வர்மப் புள்ளிகளைத்தூண்டி நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளையும் பராமரிக்கிறது. வெப்பத்தை குறைத்து ,உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க தங்கம் மட்டுமே ஏற்றது. தங்கம் எப்பொழுதும் நம் உடலை தொட்டுக்கொண்டிருப்பதால் நாளடைவில் உடலின் அழகை அதிகரிக்கும் ஆற்றலுள்ளது.

அதாவது நமக்கு நோய்கள் உருவாவதை தடுப்பதற்கு மருந்துகளை உபயோகிப்பதை விட நகைகளை நாம் அணிந்தால் அது நல்ல பயன் தரும். (தங்கத்தில் என்று இல்லாமல் முத்து வெள்ளி போன்றவற்றில்) நாம் நகை அணிதல் நல்லது. பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகிறோம். தங்கத்தில் மகாலட்சுமி இருப்பதால் நாம் காலில் அணியும்நகைகள் தங்கத்தில் அணிவதில்லை.

அத்துடன் வெள்ளி நகைகள் நம் ஆயுளை விருத்தி செய்யக் கூடியவை. நம் உடல் சூட்டைஅகற்றி குளிர்ச்சியாக்கி சருமத்தை ஆரோக்கியமாக்கும். சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு கொலுசு அணிவித்து விடுகின்றோம். குழந்தைக்கு நடக்கும்போது எப்போதும் சங்கீதம் கேட்க வேண்டும் என்பதாலும் குடும்பத்தினருக்கு குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதற்கும் கொலுசு அணிவிக்கப்படுகிறது.

உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம். வெள்ளி கொலுசு குதிகால் நரம்பினை தொட்டு கொண்டிருப்பதால் குதிகால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்து கட்டுப் படுத்துகிறது. மேலும் பெண்களின் இடுப்பு பகுதியை ஸ்திரப்படுத்தவும் கொலுசு பயன் படுகிறது.



# சோதிடக்கலை மூலம் மக்கள் அறியக்கூடிய முக்கிய செய்திகள்

## 12 பாவங்களுக்குமானவை

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



(சென்ற வாரத் தொடர்ச்சி.)

**ஐந்தாம் பாவம்:** ஒரு சாதகரின் புத்தி தீட்சண்யம், குழந்தைகள், மற்றவர்களுடன் உல்லாசமாய் சந்தோசமாய் பழகுதல், புகழ், கௌரவம், அரச ஆதரவு உறவினர் நிலைகள், தந்தையின் நிலைகள், பூர்வ கர்மா நிலை என்பவற்றை இதனால் கூற முடியும்.

குரு புத்திரகாரன், செல்வகாரன், அறிவுக்கு அதிபன், விவாகம் பற்றிய விபரம் என்பவற்றையும் அறிய உதவும். இந்த 5ஆம் வீட்டுடன் 6ஆம் அதிபன் எவ்வாறு சம்பந்தப்படுகிறார். 5க்கு 5ஆம் அதிபதியான 9ஆம் பாவம் எந்த நிலையில் உள்ளது என்பதையும் அறிந்து கொண்டு பலன்களைக் கூற முற்படலாம்.

இந்த ஐந்தாம் பாவத்தில் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் எந்த நிலையில் பெலம் பெற்றுள்ளன. என்பதை அறிந்தும் மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களில் பலாபலன்களை உணர்ந்து கொள்ள முடியும். அத்துடன் அறிவுபூர்வமாய் விவேகமாய் நுட்பமாய் கெட்டித்தனமாய் வீரமுடையதாய் செயற்படுவாரா? என்பதையும் தெரியமுடியும்.

**முக்கியத்துவம் பெறுவது "புத்திர பாக்கியம்" என்க:** ஐந்தாம் பாவ அதிபன் வளர்பிறைச் சந்திரன், அல்லது சுக்கிரனால் பார்க்கப் பெற்றாலும், உடனிருக்கப் பெற்றாலும் பல புத்திரர்கள் ஏற்படலாம். ஆனால் செவ்வாய் பார்த்தால் புத்திரம் இல்லை.

ஐந்தாம் அதிபன் கேந்திர கோணங்களில் இருந்து கொடிய பாதிப்பான பார்வைகள் இல்லாமல் இருந்தால் இளம் வயதுப் பராயத்திலே புத்திர பாக்கியம் கிட்டும். 5 ஆம் பாவம் ராகு கேது கிரகங்களுடன் சம்பந்தப்பட்டு நீச நிலை கண்டால் நாக தோஷம் என்ற நிலை தரும். இது குழந்தைப் பாக்கியத்தை தடை பண்ணும்.

சர்ப்ப சாந்தி செய்தால், சுப பார்வையும் இருந்தால், கேந்திர கோணங்களில் 5 ஆம் பாவ அதிபதி இருந்தாலும், குழந்தைகள் கிடைக்க சந்தர்ப்பம் உண்டு. இதை விட 3,7,9 ஆம் பாவ அதிபர்கள் புத்திகளிலும் கோசரரீதியாக 5,7,9 ஆம் இடங்களில் குரு சஞ்சாரம் செய்தாலும் புத்திர பாக்கியப் பலன் அமையும்.

ஐந்தாம் பாவம் கெட்டிருந்தாலும், சனி புதன் கிரகபார்வை பெற்றாலும், சனி 7 ஆம் வீட்டில் இருந்தாலும், 5 ஆம் பாவ அதிபதி பத்தில் இருந்தாலும், ராகுவுடன் சம்பந்தப்பட்டாலும் புத்திர தோஷம் நீங்கப் பெறும். முறையான பரிகார வழிபாடுகள் மூலம் இந்த தோஷம் நீங்கப் பெற்று குழந்தைச் செல்வம் கிட்ட வாய்ப்புண்டு.

**ஆறாம் பாவம்:** நோய்கள், பகைவர்கள், விபத்துக் காயங்கள், தொற்று நோய்கள் தாய்வழி உறவினர் தொடர்பு, பண நஷ்டம், மனப்பயம் கொள்ளல், எதிர்பாராத தொல்லைகள், பெண்களால் மனவேதனைகள், வழக்குகள், கடன்கள், தாய் வழி மாமன், மாமி குடும்ப உறவுகள் தொடர்புகள், தொழிலாளர், வேலையாட்கள், பற்றிய செய்திகளை இந்தப் பாவமூலம் அறியலாம்.


**நோய் பிணிகள்:** எந்தக் கிரகம் சம்பந்தப்படுகிறதோ அது சம்பந்தமான நோய் காணவும், பாதிப்பான நிலையில் காணப்பட்டால் நோய் அதிகப்படவும், சுபபார்வை சுபநிலையில் இருந்தால் நோய் குறைவடையவும், விரைவாக குணமடையவும் செய்யும்.

அக்கினி அம்சம் பெற்ற இராசிகளில் லக்கினம் அமைந்திருந்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கிடைக்கவும், இதனால் நோய் அதிகம் இல்லாமற் போகும் சந்தர்ப்பமுண்டு. ஆயினும் இதற்கு நேர் மாறாய் ஜலம் அம்சம் பெற்ற இராசிகளில் லக்கினம் அமையப்பெற்றால் நோய், பிணி, அதிகரிக்கவும் சந்தர்ப்பமுண்டு.

எந்தப் பாகத்தில் நோய் மிகுதியாகும். என்பதை 6 ஆம் பாவம் அமைந்துள்ள இராசியைக் கொண்டு அறியலாம். உதாரணமாய் ஆறாம் பாவ அதிபதி லக்கினத்தில் அமைந்தால் தலையில் நோய் ஏற்பட சந்தர்ப்பமுண்டு. பொதுவாக ஆறாம் அதிபதி தெசாபுத்தி கோசரநிலையில் ஆறாம் அதிபதி பாதிக்கப்படும் போது நோய்களின் தொல்லைகள் இருக்கவும் செய்யும்.

**ஆறாம் அதிபதியும் விபத்தும்:** ஆறாம் அதிபதி லக்கினாதிபதியுடனும் சந்திரனுடனும் சேர்ந்தால் நீரினால் கண்டம் ஏற்படலாம். சூரியனுடனும் சேர்ந்தால் நெருப்பினால் துன்பம் வரலாம். அல்லது நெருப்புக் காய்ச்சல் ஏற்படலாம். செவ்வாயுடன் சம்பந்தப்பட்டால் ஆயுத உபகரணங்களால் பாதிப்பு ஏற்படலாம்.

இதை விட புதனுடன் சம்பந்தப்பட்டால் பித்தம், வாந்தியும், சுக்கிரன் சம்பந்தமானால் பெண்கள் தொடர்பால் கடும் ஆபத்து நிலையையும், சனியுடன் சம்பந்தமான பொருட்கள் திருட்டுப் போகும் சந்தர்ப்பம் அமையவும். நரம்புக் கோளாறால் நோயை எதிர் கொள்ளவும் பலனமையும். மேலும் ராகு கேதுக்கள் சேர்க்கை இருப்பின் விஷம் சார்ந்தவற்றால் பாதிப்பு இருக்கவும், நெருப்பினால் விபத்து இருக்கவும், பெரும் ஆபத்துக்களை எதிர் கொள்ளவும், அத்துடன் சனி ராகு இணைவு 4 கால் பிராணிகளால் ஆபத்து எதிர் கொள்ளவும். சந்தர்ப்பமாகலாம்.



**ஆறாம் அதிபதியும் மோசடி திருட்டுப் பொய் உரைத்தல்:** ஆறாம் அதிபதி சூரியன் ராகு கேது சம்பந்தப்படில் நீதிமன்ற வழக்கு பிணக்குக் காணவும் மற்றவரின் பொருளை அபகரித்து திருட்டு பெயர் கேட்கவும், கள்ளக் கையெழுத்திடவும், நாவாம்ச நிலையையும் பிழையாக அமைந்தால், பொய்ச்சாட்சி கூறவும் தூண்டல் செய்யும்.

**ஏழாம் பாகம்:** இது காதல், கல்யாணம், கணவன், மனைவி, பொது எதிரி, சட்டப்பிணக்குகள் வழக்குகள் பங்காளித் தொடர்பு வியாபாரம் பயணம் குடும்ப தகராறு, வாழ்க்கை வட்டம், போன்றவை விபரங்களைக் கூறும் சுக்கிரன் களத்திரகாரன் திருமணம் பற்றிய தகவலை வெளிப்படுத்தும்.

7 ஆம் பாவத்திலிருக்கும் கிரகம் 7 ஆம் பாவாதிபதி நாவாம்ச நிலையில் 7 ஆம் பாவ நிலை சுக்கிரன் அமைந்தால் இவை ஆராயப் படுமிடத்து கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் அமையும் நிலையும் தெளிவுபடுத்தும். எனவே 7 ஆம் பாவம் சுபநிலை பெறுவதும், சுப பார்வை பெறுவதும், குடும்ப வாழ்வு விவாக நிலைக்கு முக்கியமாகும்.

இல்லறம் நல்லறமாவதற்கு 7 ஆம் பாவம் பலம் பெற்று சுப நிலையில் அமைந்திருப்பது மிகவும் முக்கியமாகும். சூரியன் பாவக்கிரகம், செவ்வாய் பாவக்கிரகம் இது 7 ஆம் பாவத்தில் அமைவதால் கணவன் மனைவி ஒற்றுமை வேற்றுமை ஏற்படவும் குடும்பப்பிரிவு ஏற்படவும், இருவரது குணாம்சங்களும், கெட்டவன், கெட்டவள் எனச் சொல்லுமளவிற்கு காணும் நிலையைத் தரும். 7 ஆம் அதிபதியுடன் சந்திரன் பாவக்கிகமும் சேர்வதால் தார தோஷம் வரும் என்பது விதியாகும்.

7 ஆம் பாவம் புதனாகி பாவக்கிரகம் சேர்க்கும் அல்லது பார்வை பெற்றாலும் மனைவியை கொடியவர் என்ற பெயர் கேட்க வைக்கும். 7 ஆம் பாவம் வியாழன் ஆகி பாவக்கிரகம் சேர்க்கையானால் கெட்ட நிலையும், சுப பார்வை சுக சேர்க்கை பெற்றால் அற்புதமான உத்தமமான மனைவி கிடைக்க சந்தர்ப்பம் உண்டு.

ஏழாம் பாவம் மூலம் கணவன் மனைவி அமையப் போகும் திசையை அறியலாம். சுக்கிரனுக்கு ஏழாம் பாவம் எதுவோ அதன் இராசிக்குரிய திசையைக் கூறலாம். இதைவிட லக்கினத்திலிருந்தும் சந்திரனில் இருந்தும் 7 ஆம் பாவ நிலை இராசி அறிந்து அதற்குரிய திசையையும் கூறலாம். மேலும் ஏழாம் பாகத்தில் இருக்கும் கிரகம் வழிபாடு நிலையிலிருந்தால் அதன் திசையும் கூறலாம்.

**மானார் வீடும், மாமியார் வீடும்:** லக்கின அதிபதியை விட 7 ஆம் பாவ அதிபதியும், 3 ஆம் பாவ அதிபதியும் வலுவாக இருப்பின் புகுந்த வீடு வசதி வாய்ப்புக்கள் உள்ளவை எனலாம் இதனால் மாமனார் மாமியார் உறவுகள் தொடர்புகள் மேலேங்கும். இவ்வாறு நல்ல உறவு தரக்கூடியதால் 7 ஆம் பாவ நிலை தொடர்பு இல்லையாயின் மாமன், மாமி தொடர்பு, உறவு, பற்று, பாசம் நிலையில் விரக்தி தரும்.

**திருமணகாலம்:** லக்கினம் ராசி சுக்கிரன் இவற்றிற்கு 7 ஆம் வீடு எதுவோ அதனுடைய நல்ல தெசாபுத்திகளில் விவாகம் நடக்கலாம். ஏழாம் வீட்டில் இருக்கும் கிரக தெசாபுத்தியிலும் நடக்கலாம். 7 ஆம் வீட்டை பார்வை செய்யும் கிரக தெசாபுத்தியிலும் நடக்கலாம். கோசரத்தின் குருபகவான் 2,5, 7, 9, 11 ஆம் இடங்களில் சஞ்சரிக்கும் காலத்திலும் நடக்கலாம்.

**எட்டாம் பாவம்.**

இந்த எட்டாம் பாவம் மூலம் உயில் எழுதப்படும் சாசனம் மூலம் சொத்து சுகங்கள் வருவதையும், மனைவி மூலம் சொத்து சுகங்கள் வருவதையும் மனைவி மூலம் சீதன சொத்துக்கள் வந்தடைவதனையும், எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் வந்து சேர்வதனையும் அறியலாம். இதை விட ஆயுள் ரீதியான பலனையும், நீதிமன்ற வழக்குகள், விவகாரங்கள் சச்சரவுகள் பணம் பொருள் விரயமாகுதல் தீராத வியாதிகள் ஏற்படுவதையும் இதனால் மரணம் நிகழக்கூடியதையும் விபத்துக்கள் சம்பவிக்கக் கூடியதையும் கூறும்.

சனி ஆயுள் காரகன் 8 ஆம் நிலையில் நல்ல வலுப் பெற்றிருக்க வேண்டும். 8 ஆம் பாவம் சரராசியில் அமைந்தால் கபம், வாதம், கல்லீரல், வயிற்றுக் கோளாறு, புற்று நோய், மூத்திரதோசம் சம்பந்தப்படும் நோய்கள் காரணமாகலாம்.

8 ஆம் பாவம் ஸ்திர ராசியில் அமைந்தால் இதயம் தாக்கம் மார்ச் சளி கல் அடைப்பு நிலை முதுகுப்புறம் மூச்சுத் திணறல் இவை சம்பந்தப்படும் நோய்கள் காரணமாகலாம்..

**8 ஆம் பாவம் உபயராசியில் அமைந்தால்:** நீரிழிவு ஆஸ்துமா குடல் வியாதிகள் சம்பந்தப்படலாம்.

எட்டில் ராகு செவ்வாய் சனி நின்றால் அல்லது 8 ஆம் பாவத்தை இக் கிரகங்கள் பார்த்தால் திடீர் மரணம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

எட்டாம் இராசி பாவம்: சர நிலை பெற்றால் அகால மரணம் சம்பவிக்கும்.

எட்டாம் இராசி பாவம்: ஸ்திர பெற்றால் நீரில் மூழ்குதல், கழுத்து நெரிக்கப்படல், மூச்சுத்திணறல், போன்ற துர் மரணம் சம்பவிக்கும்.

எட்டாம் இராசி பாவம்: உபயராசி நிலை பெற்றால் தற்கொலை, வாகனம் கவிழ்தல், மூழ்குதல், போன்ற காரணிகளால் அகால மரணம் சம்பவிக்கும்.

சனி சூரியன் சந்திரன் 8 இல் பாதிக்கப்பட்டால் காலத்திற்கு முந்தியதாய் மரணம் சம்பவிக்கலாம்.

8 ஆம் அதிபதி லக்கின அதிபதியை விட வலிமை குறைவது நன்மை.

**இவ் வார சந்திராஸ்டமம்.**
**29.05.2016 முதல் 04.06.2016 வரை.**

கடகராசி: 29,30 ஆம் திகதிகள்
சிம்மராசி: 31,01 ஆம் திகதிகள்
கன்னிராசி: 02,03 ஆம் திகதிகள்
துலாராசி: 04 ஆம் திகதிகள்

ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஸ்டமம் இல்லை.

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய் பிணி துன்பம் துயரம் கஸ்டம், நஷ்டம் அலைச்சல் இழப்பு நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

**வாரம் ஒரு தகவல்**

அரச மரத்தை சுற்றுவோம்.

அரசும் வேம்பும் ஒன்றாக வளரும் இடத்தில் ஓர் உயிரியல் மின்சக்தி நிலவுகிறது. இவைகளை வலம் வரும் போது நம் உடலிலுள்ள சில சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. குழந்தைப் பாக்கியம் இல்லாதபெண்களுக்குசூழகம்தூண்டப்பட்டு சுரப்பு நீர் சம்பந்தம்பந்தப்படுகிறது. வேம்பும் அரசும் வெளிப்படுத்தும் பிராணவாயு ஓசோன் கலந்ததாக இருக்கிறதுஇ விஞ்ஞான ஆய்வின் படி ஒரு அரசமரம் நாள் ஒன்றுக்கு 2400 கிலோ பிராணவாயுவை வெளியிடுகிறது. சோதிடங்களும் குழந்தைப் பாக்கியம் பொருட்டு பெண்களை 9 முறை 9 தரம் அரசமரத்தை வலம் வரும்மாறு அறிவுறுத்துவதை நாம் அறியலாம். "மரங்கள் அனைத்துள்ளும் நான் அரசமரமான இருக்கின்றேன்." என்பது கீதையில் கண்ணன் வாக்கு என்பதையும் நாம் தெரிந்திருக்க வேண்டும்.

கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687



# வைத்தியரிடம் கேளுங்கள்



**எனக்கு வயிற்றுப் பொருமல் அடிக்கடி ஏற்படுகிறது. அத்துடன் பசியின்மையும் நெஞ்செரிச்சலும் ஏற்படுகிறது. அவை நீங்க மருந்து சொல்லுங்க.**

**பாலமுருகன், வயது 36, நுணாவில்.**

**கேள்வி:** செயற்திறன் குறைந்தவர்களை அவன் ஒரு வெங்காயம் எனச் சொல்லும் வழக்கம் உண்டு. ஆனால் வெங்காயம் பல மருத்துவ குணங்களை உடையது எனச் சொல்கிறார்கள். இதன் மருத்துவ குணங்கள் என்ன?

**பதில்:** வெங்காயம் தமிழர் சமையலிலே முக்கிய இடம் பெறுகிறது. இதற்கு பல நோய்களைத் தீர்க்கும் மருத்துவக் குணமுண்டு. வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட்டு வந்தால் மூல நோயால் ஏற்படும் ஆசனக்கடுப்புத் தீரும். வெங்காயச்சாறு, மோர் கலந்து சாப்பிட்டால் இருமல் குறையும். வெங்காயம் பல விற்றமீன்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இதனால் நரம்புத் தளர்ச்சி குணமடையும். வெங்காயத்தை வதக்கி தேன்விட்டு இரவில் சாப்பிட்ட பின் பால் குடித்தால் ஆண்மை பெருகும். இது வயிற்றிலுள்ள சிறு குடல்ப் பாதையை சுத்தப்படுத்துகிறது. சமிபாட்டுக்கு



உதவுகிறது. இதனால் இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. வெங்காயத்தை முகப்பரு உள்ள இடத்தில் தேய்த்து வர முகப்பரு மறைகிறது. தலையில் வட்டமாக முடி உதிர்ந்து இருந்தால் வெங்காயத்தை துண்டாக்கி தேய்த்து வர முடி வளரும்.

**மலர்விழி, வயது 32, கோப்பாய்.**

**கேள்வி:** எனக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகிறது. ஆனால் இன்னும் குழந்தைகள் இல்லை. மாதவிடாய் ஒழுங்கீனம் உள்ளது. இதற்குரிய சித்த மருத்துவம் என்ன?

**பதில்:** நீங்கள் குறிப்பிட்டபடி மாதவிடாய் சுழற்சி மாறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஓமோன் குறைபாடுகள், மனஅழுத்தம், சினைப்பை நீர்க்கட்டி போன்றவற்றால் இந்நிலை ஏற்படலாம். எனவே பரிசோதனைகள் மூலம் சரியான நோய் நிர்ணயம் செய்த பின்னரே உங்களுக்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். புஷ்யானுக சூரணம், அசோகா அரிஷ்டம் போன்ற மருந்துகள் கருப்பை கோளாறுகள் நீங்க உதவுகின்றன.

**ஜீவிதன், வயது 25, பாஷையூர்.**


**கேள்வி:** எனது உடல் எந்த நேரமும் உஷ்ணமாகவே இருக்கிறது. மிகவும் மெலிவாக இருக்கின்றேன். உடல் உஷ்ணம் குறைய என்ன செய்யலாம்?

**பதில்:** இதை சித்த மருத்துவத்தில் கணைச் சூடு என்பார்கள். நெல்லிக்காய் லேகியம், கணைநெய் போன்ற மருந்துகள் பயனளிக்கும். வைத்திய ஆலோசணையுடன் பாவிக்கவும்.

**பிலோமினா, வயது 30, நாவாந்துறை**

**கேள்வி:** எனக்கு ஏற்கனவே 2 குழந்தைகள் உண்டு. தற்போது கர்ப்பமாக இருக்கிறேன். கர்ப்பமான பெண்கள் பப்பாளிப்பழம் சாப்பிடக் கூடாது என்கிறார்களே இது எந்த அளவுக்கு உண்மை.

**பதில்:** கற்பிணிப் பெண்கள் பப்பாளிப் பழத்தை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் உடல் வெப்பம் அதிகரித்து ஆரம்ப நிலையில்




உள்ள கரு கலைந்து விடும். அல்லது கரு உருவாதல் தள்ளிப் போகும் என்பதால் இத்தகையதோர் கருத்து வெளியாகி இருக்கலாம். ஆனால் பழத்தில் ஒன்று அல்லது இரண்டு துண்டு சாப்பிடுவதில் தவறு ஏதும் இல்லை. பப்பாளிப்பழத்தில் விற்றமின் ஏ, பி, ஈ மற்றும் நார்ச்சத்து நிறைய உள்ளது மேலும் கொழுப்பினைக் குறைக்கவும், மலச்சிக்கலை தவிர்க்கவும் இப் பழம் உதவுகிறது.

**செல்வநாயகி, வயது 40, கொழும்புத்துறை**

**கேள்வி:** எனக்கு வயிற்றுப் பொருமல் அடிக்கடி ஏற்படுகிறது. அத்துடன் பசியின்மையும் நெஞ்செரிச்சலும் ஏற்படுகிறது. அவை நீங்க மருந்து சொல்லுங்க.

**பதில்:** சுக்கு, திக்கிலி, மிளகு, ஏலம், சீரகம், இவை வகைக்கு 5 கிராம் எடுத்து இளவறுப்பாய் வறுத்து இடித்து சூரணம் செய்து சீனி கலந்து சுடுநீரில் மூன்று வேளை சாப்பாட்டுக்கு முன் ஒரு தேக்கரண்டி வீதம் அருந்தி வர குணமாகும். சிரேச மருத்துவத்தில் இது பஞ்ச தீபாகினிச் ஆபரணம் எனப்படும்.



**மாலதி, வயது 36, மானிப்பாய்.**

**கேள்வி:** எனது மகன் பிரவின் வயது 8 கை, கால் மற்றும் இறைகளில் சிரங்குப்புண் உள்ளது. அதற்கு வெளிப்பூச்சாக என்ன மருந்து பாவிக்கலாம்.

**பதில்:** கந்தகம், மிளகு, ஏலம், வேம்பாடல், மஞ்சள், கருஞ்சீரகம், வகை 10 கிராம் எடுத்து அரைப்போத்தல் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி பூசிவர குணமாகும்.

---

## மக்கள் குரல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்திலுள்ள பால்சேனை கிராமத்தில் காட்டு யானையின் தொல்லையால் மக்கள் தொடர்ந்தும் அவலத்தை சந்தித்து வருகிறார்கள். கடந்த வாரமும் ஊருக்குள் புகுந்து யானை அட்டகாசம் புரிந்துள்ளது.

இதன் தாக்குதலினால் 2 தற்காலிக கொட்டில்கள் முழுச்சேதமடைந்துள்ளதுடன் பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், 03 கல் வீடுகளுக்கும் பகுதிச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், தென்னை, வாழை மற்றும் சிறு தோட்டப் உபயிர்களுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பால்ச்சேனை காட்டிற்கு பாலப்பழம் பறிக்கச் சென்ற குடும்பமொன்றில் கணவன் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இருந்த போதிலும் தமது வீட்டிக்கு வந்து வெளியில் நின்ற தம்மை மீண்டும் தாக்குவதற்கு முயற்சித்த வேளை பக்கத்து வீட்டுக்காரர் உரக்க கூச்சலிட்டதால் வீட்டுக்குள் புகுந்து கதவினை அடைத்து உயிர் தப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காட்டு யானைகளின் தொல்லை காரணமாக இரவில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாமல் உள்ளதாகவும், கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் துன்பப்படுவதாகவும், கடன் பெற்று பயிர்செய்யும் சிறுதோட்டப்பயிர்களை இரவில்வந்து துவம்சம்செய்வதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் கொள்வார்களா?











# பசித்தவன் விசுவாசத்தை நம்பலாமா?

கிணறு ஒன்றில் கங்காதத்தன் என்ற கிழத்தவளை ஒன்று வசித்து வந்தது. இந்தத் தவளையை அங்கிருந்த மற்ற தவளைகள் அடிக்கடி தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தது.

மற்ற தவளைகள் கொடுத்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிழத்தவளை கிணற்றுவாளி கயிறைப்பிடித்து ஒருமாதிரி வெளியே வந்து மற்ற தவளைகளை என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது அந்தக் கிணற்றுக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று அதன் கண்ணில்பட்டது.

'நம்மைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் தவளைகளை இந்தப் புற்றிலிருக்கும் பாம்பின் உதவியோடு கொன்று விட்டால் என்ன?' என்கிற எண்ணம் வந்தது.

மெதுவாகப் பாம்புப் புற்றின் அருகில் சென்று பாம்பை நட்புக்கு அழைத்தது.

'உங்களுடைய பரம எதிரியான என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்?' என்று கேட்டது அந்த பாம்பு.

'என்னுடன் இருக்கும் சில தவளைகள் என்னை தினந்தோறும் துன்புறுத்தி வருகின்றன. என்னால் பொறுக்க முடிய வில்லை. அவற்றை அழிக்கத்தான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். வேண்டாதவர்களை எதிரியைக் கொண்டே அழிக்கலாம் என்று நீதி நூலில் கூட சொல்லியிருக்கிறது' என்றது அந்த கிழத்தவளை.

'என்னால் எப்படி உன் இடத்திற்கு வரமுடியும்?'

'நான் வந்த வாளிகயிற்றின் வழியாக உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன்' என்றது தவளை.

பாம்பும் யோசித்தது.

நாமோ தினமும் உணவிற்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது இப்படி வலிய வந்து உணவிற்கு வழி செய்யும் தவளையின் கோரிக்கையை நாம் ஏன் மறுக்க வேண்டும்? என்று நினைத்தபடி தவளையுடன் அந்த கிணற்றுக்குள் சென்றது.

அந்த பாம்பும் கிணற்றுக்குள் அந்த கிழத்தவளைக்குத் தொல்லை கொடுத்து வந்த தவளைகளை எல்லாம் தின்று அழித்தது. கிழத்தவளையும் மகிழ்ச்சியுற்றது.

ஆனால் அந்த மகிழ்ச்சி நெடுநாள் நீடிக்க வில்லை.

பாம்பு கிழத் தவளையைப் பார்த்து 'உன்னுடைய எதிரிகள் எல்லாம் அழிந்து விட்டபடியால் என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.' என்றது

கிழத்தவளையோ 'நண்பரே... நீங்கள் வந்த வேலை முடிந்து விட்டது. உங்கள் உதவிக்கு நன்றி. எனக்கு இனி உங்கள் உதவி தேவை யில்லை.' என்றது.

ஆனால் பாம்போ கோபத்துடன் 'உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். இப்போது என்னுடைய இடத்தில் வேறு ஏதாவது வந்து குடியேறியிருக்கும். தினந்தோறும் எனக்கு நீயே ஒரு தவளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லையேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன்' என்று அச்சுறுத்தியது.

கிழத்தவளையும் பயந்து போய் தினந்தோறும் ஒரு தவளையை பாம்புக்குக் கொடுத்து வந்தது. கடைசியில் ஒருநாள் அது கிழத்தவளையின் மகனையும் தின்று தீர்த்தது.

இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற கிழத்தவளை யின் மனைவி 'நீங்கள் இந்தக் கொடியவனைக் கொண்டு வந்து நம் குழந்தையை மட்டுமில்லை குலத்தையே அழித்து விட்டீர்கள். இனி நாமிருவர் மட்டும்தான் பாக்கி. நாமும் அழிந்து விடுவதற்கு முன்பு ஏதாவது சூழ்ச்சி செய்து அந்த பாம்பைக் கொன்று விடுங்கள் அல்லது நாமிருவரும் இங்கிருந்து தப்பித்துச் சென்று விடுவோம்.' என்று எச்சரித்தது.

அந்த சமயத்தில் அங்கு வந்த பாம்பு தனக்குப் பசியாக இருப்பதால் 'ஏதாவது கொடு' என்று கேட்டது.

உடனே கிழத்தவளையும் 'நண்பரே நாங்கள் இருக்கும் வரை நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இப்போதே என் மனைவியை அனுப்பி வேறு கிணற்றிலிருந்து தவளைகளை இங்கே அழைத்து வரச் சொல்கிறேன்.' என்று மனைவியை அங்கிருந்து போகச் செய்தது.

சில நிமிடங்கள் கழிந்த பின்பு 'நீ எவ்வளவு நேரம்தான் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பாய்? நானே வேகமாய்ப் போய்த் தவளைகளை அழைத்து வருகிறேன்' என்றபடி கயிற்றின் வழியே அக்கிணற்றை விட்டு வெளியேறியது.

தன் பசிக்கு உணவு கொண்டு வரச் சென்ற கிழட்டுத்தவளையும் அதனுடைய மனைவியும் ஒரு நாளாகியும் வராமலிருக்கவே பாம்பு ஏமாற்றமடைந்தது.

கிணற்றுச் சுவற்றிலிருந்த ஒரு பல்லியைப் பார்த்த அந்த பாம்பு 'பல்லியாரே அந்தக் கிழட்டுத் தவளைக்கு நீயும் நண்பன்தானே. நீ அந்தத் தவளையிடம் சென்று நான் அந்தத் தவளைக்குத் துரோகம் செய்யமாட்டேன் என்று நான் உறுதியளித்ததாகச் சொல்லி பயப்படாமல் வரச் சொல்' என்று தகவல் சொல்லி அனுப்பியது.

பல்லியும் அந்தக் கிழட்டுத்தவளையைத் தேடிச் சென்று பாம்பு சொன்ன செய்தியைச் சொல்லியது.

அதற்கு அந்தக் கிழட்டுத்தவளை 'பசித்தவன் விசுவாசம் நம்ப முடியாதது. அந்தக் கொடியவனிடம் நட்பு வைத்து என் குடும்பத்தினர் அனைவரையும் இழந்து விட்டேன். நான் இனி அங்கு வர மாட்டேன்.' என்று சொல்லி அனுப்பியது.

இப்படித்தான் நாம் நம்முடைய சொல்லுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தீயவர்களோடு நட்பு கொண்டால் அந்தத் தீயவர்கள் நம்மையும் சேர்த்து அழித்து விடுவார்கள்.

நட்பு கூட நல்லவர்களோடுதான் இருக்க வேண்டும். இல்லையேல் இழப்பு நமக்குத் தான்.

## விடுகதையும் விடைகளும்

1 அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?
3. காக்கைப் போலக் கருப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?
4. தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?
6. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, தொட்டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?
7. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
8. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான் அவன் யார்?
9. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
10. நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

**விடைகள்**

*1. வாழைப்பூ ,2. பேனா ,3. நாவல் பழம், 4. தேங்காய், 5. காய்ந்த மிளகாய் 6. நீர்க்குமிழி, 7. விரல்கள், 8. பம்பரம், 9. கிளி 10. பூனை*

## பொதறிவு

1 வாத்து நீரில் வட்டமிட்டபடியே தூங்கும்.
2 ரொபின் இனப் பறவை பாடிக் கொண்டே தூங்கும்.
3 பாம்புகள் கண்களை திறந்து கொண்டு தூங்கும்.
4 மனிதனால் மட்டுமே பூமியில் முதுகை வைத்து தூங்கமுடியும்.
5 வரிக்குதிரை நின்று கொண்டு தூங்கும்.
6 மாடுகள், ஒட்டகங்கள் அசைபோட்டுக் கொண்டே தூங்கும்.
7 கோழிகள் நின்று கொண்டே தூங்கும்.
8 மனிதனால் கண்களை பாதி திறந்து கொண்டே தூங்க முடியும்.
9 கோழிகளால் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே தூங்கி விழிக்க முடியும்.
10 குரங்குகள் மரத்தில் தொங்கிய படியே தூங்கும்.

## நம்பிக்கையை தளர விடாதே!

ஜென் குரு ஒருவர் தன் சீடர்களுக்கு தன்னம்பிக்கை பாடத்தை சொல்லிக் கொடுத்தார். அதனால் அந்த பாடத்தை தன் சீடர்களுக்கு புரியும் படியாக கதையின் வாயிலாக சொல்ல ஆரம்பித்தார். அந்த கதை என்னவென்றால் "வேடன் ஒருவனுக்கு யானை என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவன் காட்டில் குழிகள் பலவற்றை வெட்டி, அவற்றில் விழும் குட்டி யானைகளை பிடித்து, இரும்புச்சங்கிலியில் கட்டிவிடுவான். அந்த யானைகளோ அவனிடமிருந்து தப்பிக்க எவ்வளவோ முயற்சிக்கும். இருப்பினும் அவற்றால் முடியாத காரணத்தினால், நாளடைவில் நம்பிக்கையை இழிந்துவிடும்.


பின் அந்த யானைகள் பெரிதானவுடன், அதனை கயிற்றால் கட்டிவிடுவான். அப்போது ஒரு நாள் வேட்டைக்கு ராஜா அந்த காட்டிற்கு தன் மகனுடன் வந்தார். அப்போது பெரிய யானைகள் கயிற்றிலும், குட்டி யானைகள் இரும்புச்சங்கிலியிலும் கட்டியிருப்பதை பார்த்து, அந்த வேடனிடம் "எதற்குகுட்டி யானைகளை இரும்புச்சங்கிலியிலும், பெரிய யானைகளை கயிற்றிலும் கட்டியுள்ளாய். அவை கயிற்றை அறுத்துக் கொண்டு போய்விடுமல்லவா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த வேடன் "மன்னா! பெரிய யானைகள் குட்டியாக இருக்கும் போது இரும்புச்சங்கிலியால் தான் கட்டப்பட்டிருந்தன. இவை பெரிதானதும் வேறு இடத்திற்கு போய் என்ன செய்வது என்று நம்பிக்கையை இழந்துவிட்டன. ஆகவே தான் கயிற்றில் கட்டியுள்ளேன்." என்றான்." என்ற கதையை சொல்லி, எனவே இந்த யானைகளைப் போல் அடைய நினைக்கும் இலக்கை அடையும் வரை நம்பிக்கையை இழக்காமல், ஏற்கனவே மேற்கொள்ளும் முயற்சியை விட அதிக முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அன்றைய தன்னம்பிக்கை பாடத்தை முடித்தார்.

தீபத்தின் மாணவர் பகுதியுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம் மாணவச்செல்வங்களே. கதை, கவிதை, சித்திரம், துணுக்கு என உங்கள் ஆக்கம் எதுவானாலும் உங்கள் படத்துடன் அனுப்பி வையுங்கள்.











இ.பாவிஷன்
பிரிட்டிஷ் வர்த்தக கல்லூரி பிரைவேட் லிமிடெட்
4 வயது



அண்மையில் தெற்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது எடுத்தபடம். வெளத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியொருவர் வீதியோரமாக பாய் விரித்து நனைத்த தனது பாடப்புத்தகங்களை காய வைத்த காட்சி. இந்தகாட்சி பலரையும் நெகிழவைத்திருந்தது.



கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பி.எஃப்.டெக் ( B.F.Tech - Bachelor of Farm Technology) எனப்படும் பண்ணைத்தொழில் நுட்பவியல் படிப்பில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் பயின்று பட்டம் பெற்றுள்ளார். அவர்தான் சுவாமி அன்பு சுந்தரானந்தர். கோவையை சேர்ந்த இவருக்கு வயது என்ன தெரியுமா? 73.


இப்படியொரு பாலத்தை இதற்கு முன்னர் யாரும் பார்த்திருக்க மாட்டீர்கள். அனுராதபுரத்திலுள்ள கெக்கிராவ கிராமத்திலிருந்து 7 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஹபரன வீதியில் அமைந்துள்ளது கனேவல்பொல என்ற கிராமம். அங்குதான் உலகமகா அதிசயமான இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது.




கழிவறை சுத்தமாக இல்லையென்றால், உடனடியாக அறிவிக்கும் படி, புதிய கழிவறைக் கண்காணிப்பு முறை (toilet-monitoring system) ஒன்றைக் கண்டறிந்திருக்கிறார்கள் சிங்கப்பூரின் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி முகமையைச் சேர்ந்த ஆய்வாளர்கள்.எவ்வளவு அதிகமாக அந்தக் கழிவறைப் பயன்படுத்தப்பட்டுள்ளது, அந்த அறையில் கழிவுகளில் காணப்படும் அம்மோனியா, ஹைட்ரஜன் சல்பைட் போன்றவற்றால் ஏற்பட்டிருக்கும் துர்நாற்றத்தின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் புதிய கருவிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கழிவறை சுத்தம் செய்யப்பட வேண்டிய தேவையைக் காட்டும்.



சீனாவை சேர்ந்த இந்த யுவதிதான் இப்பொழுது பரபரப்பாக பேசப்படுகிறார். மோட்டார்சைக்கிளில் சென்ற இவர் காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். நிலத்தில் விழுந்தவரை காப்பாற்ற ஓடிவந்தவர்களை அப்பால் விரட்டிவிட்டு, நிலத்தில் விழுந்து கிடந்தபடியே படம் எடுத்து அதை சமூகவலைத்தளத்தில் பதிவேற்றிவிட்டுத்தான் எழுந்தாராம்.






இவர் ஒருகாலத்தில் இந்தியாவில் கொடிகட்டி பறந்த திருடன். 100வது திருட்டையெல்லாம் வெற்றிவிழாவாக கொண்டாடியவர். 30வருடம் சிறையில் வேறு இருந்துள்ளார். 50 வழக்கு வேறு உள்ளதாம். 261வது திருட்டுடன் திருந்திவிட்டார். இப்பொழுது கொள்ளையடித்த ஒவ்வொரு வீடாக சென்று மன்னிப்பு கேட்டு வருகிறாராம்.

உடல் முழுவதும் புள்ளிகளை கொண்ட பாம்பு வகை மீனொன்று தமிழகத்தின் திருச்செந்தூர் கடற்கரையில் இறந்தநிலையில் கரையொதுங்கியுள்ளது. அண்மையில் இலங்க கடற்பகுதியில் ஏற்பட்ட இயற்கைஅனர்த்தத்தில் சிக்கி இறந்திருக்கலாமென கருதப்படுகிறது.




யாழ் மக்களுக்கு உன்னத சேவையை வழங்கும் நிறுவனங்கள் தீபத்துடன் பயணிக்கின்றார்கள்.

**Tilko Jaffna City Hotel (Pvt) Ltd**
No: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
E-mail : info@cityhoteljaffna.com | Web : www.cityhoteljaffna.com
Tel : +94 21 222 5969 | Fax : +94 21 222 729
Hot Line : +94 21 7200 707

**Gnaanams Hotel & Restaurant**
299,301 Clock Tower Road, Jaffna, Sri Lanka.
Email : gnanamshotel@gmail.com | Web : gnanamshoteljaffna.com
Tel : + 94 021 222 0630/3 | Fax : + 94 021 222 0631
Hot Line : +94 77 960 63 97

**Millenium Guest House**
No. 76/60, Ramanathan Road,
Jaffna, Sri Lanka.
Tel : +94 77 243 1310

**Albha Mixture**
Packes Lane, Uduvil Road, Manipay, Jaffna, Sri Lanka.
E-mail : alphamixture23@yahoo.com
Tel : +94 21 225 5278
Hot Line : +94 77 772 5582

**Kiruba Learners**
No: 226, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka
Tel : 021 2224353 | 021 4923200
Hot Line : +94 77 7225292

**Sangeetha Agent**
No. 412, Hospital Road, Jaffna
E-mail : sangeethaagent@gmail.com
Office : 021 222 2525
Fax : 021 222 8546

**Abi Fashion World**
No: 112, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel : 021 2223738
Hot Line : +94 77 324 6503

**Easwa Printers**
No: 172, Ramanathan Road, Thirunelveli,
Jaffna, Sri Lanka

**Eden Motors**
No. 59, Soosaipillaiyarkulam Road, Vavuniya.
No. 08, 1st Cross Street, Vavuniya.
Tel. : 024 222 8383
Hot Line : +94 24 320 1288

**Harikanan Printers**
No: 681, K.K.S. Road, Jaffna, Sri Lanka
E-mail : print@harikanan.com | Web : www.harikanan.com
FB : harikananprinters
Hot Line : +94 21 222 2717/8

**Sai Holiday Inn**
No: 132 , Kacheri Nallur Road, Jaffna, Sri Lanka
Web : www.saiholidaiinn.com
Tel : 021 222 4616 | 021 222 6179
Hot Line : +94 77 6078888

**M.Tel Distributors (Pvt) Ltd**
No. 976, Point Pedro Road, Kalviyankadu,
Jaffna, Sri Lanka.
Tel : 021 2054199
Hot Line : +94 77 7677750

**Hari Engineers**
Malaisanthi, Alvai Road, Alvai, Jaffna. Sri Lanka
Web : www.hariengineering.com
Tel : +94 (021) -2261400
Hot Line : +94 77-2830694

**Cosy Hotel & Restaurant**
No. 272, Stanley Road, Jaffna.
Web : www.cosylanka.com | E-mail : info@cosylanka.com
FB/cosy.cosy.167
Hot Line : 021 222 7100
021 222 5899

**Nalin Information**
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
Web : www.nit.lk | E-mail : nalin@nit.lk | FB : nalin it
Tel : 021 222 1121 | 021 222 1166
Hot Line : +94 77 766 7975

**Daily Food City**
Kokuvil (Near the Kokuvil Hindu College)
Jaffna, Sri Lanka.

**ICPS**
No. 05, 10th Lane, Vairavarkovil Road, Vairavarpuliyankulam,
Vavuniya. Sri Lanka | E-mail : inforicps@gmail.com
Tel : +94 24 7200128
Hot Line : +94 77 2058222

**N.R. Advertising**
Main Street, Sanganai, Jaffna, Sri Lanka
E-mail : nr.ads@live.com | nr.advertise@gmail.com
Tel : 0776157389 | 0212251569
Hot Line : +94 779361583

மலர்ந்திருக்கும் துர்முகி புத்தாண்டு தீபத்தின்
வாடிக்கையாளர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும்
இனிதாக அமைய தீபம் குழுமத்தின் வாழ்த்துக்கள்...

இனிய தமிழ் சிங்கள
புது வருட வாழ்த்துக்கள்

**உங்கள் விளம்பரங்களை கவர்ச்சிகரமாகவும்,**
**சிறந்த வடிவமைப்புடனும்,**
**பிரசுரித்திட இன்றே தீபம் வார இதழை அனுகுங்கள்...**
**உங்கள் பணத்திற்கு கைமேல்**
**பயன்தருவது என்றால் அது தீபம் ஊடகம் மட்டுமே...**

தீபம் பத்திரிகை தற்போது ஒரு வருடத்தை
கடந்து வெற்றி நடைபோடுகிறது....

உலகத் தமிழர்களுக்கு ஓர் ஊடகம்
Worldwide Media for Tamils

**www.deepam.lk**
**Hotline : 076 825 5567**

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
**021 492 7561**

நோர்ச்சி மீடியா (பிறைவேட்) லிமிடெட்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 29.05.2016 அன்று வெளியிடப்பட்டது